780

ஸ்ரீ ராம

# விகடப்பிரசங்கம்.

முதற்பாகம்.



பூ. கிருஷ்ணபிள்ளையவர்கள்

சிவமயம்.

விடாநகைப்பை விளைவிக்கும்
வித்தார ஆசியன்
விநோத

# விகடப் பிரசங்கம்.

## முதற் பாகம்.

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற
மகாவித்வான் ஸ்ரீமான்
T. T. சங்கரதாஸ் சுவாமி
அவர்கள் மாணவரான

மதுரை. சந்தச்சரபம்
ஷண்முகதாஸ் அவர்கள்
இயற்றியது.

மதுரை புஸ்தகஷாப்
பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு
மு. கிருஷ்ண பிள்ளையவர்கள்
வெளியிட்டது.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.

ரிஜிஸ்தர் காபிரைட்

விலை] 1934 [அணா—௦

புதியபாடல்கள்! இனியகீதங்கள்!!

நமது அன்பர்கள் அனைவரும் எதிர் பார்த்திருந்த
பழனிக்ஷேத்ராம் முத்தமிழ்ச்சக்ரவர்த்தி
ஸ்ரீமது மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள்
கனிஷ்டசகோதரர் சுப்பிரமணிய ஆச்சாரியாரவர்கள்
குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

எம். ஆர். எஸ். வேலுச்சாமிகவிராயர்வர்களியற்றிய

தண்டபாணித் தெய்வ சங்கீதமென்னும்

## பக்திரசக்கீர்த்தனம்

| | | | |
|---|---|---|---|
| முதற்பாகம் | 0 | 5 | 0 |
| 2-ம்பாகம் | 0 | 5 | 0 |

உலகப்பிரசித்திபெற்ற செட்டிநகர் வித்வான்
மகா-ள-ள-ஸ்ரீ

இராமசாமிக் கவிராயரவர்களியற்றிய

## புதிய பக்திரசக் கீர்த்தனம்

இதன் விலை அணா—4

இத்தமிழ் தேசவாசிகளுக்கு
இஃது
ஓர் கற்பகத்தருவென்னும்

## சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி

பூலோகத்தில் மானிடராக அவதரித்த ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அத்யாவசியமுள்ளது. யாவரும உணரும்பொருட்டு தமிழில் எளியநடையாக அச்சிட்டு வெளிவந்திருக்கிறது.

இதன் விலை அணா—6

புதிது! புதிது!! புதிது!!!

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர்
U. P. காமாட்சி பிள்ளை அவர்கள்
இயற்றிய

## பிநோத பரமானந்தக் கீர்த்தனம்

இதன் விலை அணா—5

மு. கிருஷ்ணா பிள்ளை,
பி. கா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

சிவமயம்

விடாநகைப்பை விளைவிக்கும்
வித்தார ஆசியன்

# விநோத
# விகடப்பிரசங்கம்

## முதற் பாகம்

தத்தாதித்-தாதிபிதித்-தாதாதைத்-தகதிபிதோக்
திகதாதித்-தித்திதி-தியெனகு—தித்தாடும்
ஞானபர-கோனருள்சந்-தானமெனும்-யானைமுக
பானையிற்-றனைப்பணிப்-பகம்'

### ஆசிரிய விருத்தம்

சித்தர்கள் போற்றுமித் தலைவாசிய விநோத
திவ்விய விகடப் பிரசங்க
சிரசைத் தொடரெதுகை மோனைப்ப ராசமொடு
திவ்வியச் சொற்பொருட்சீர்
வைத்தினைய வெண்பா விருத்தங் கலித்துறை
வண்ணமொடு சந்த அகவல்
வளரும்படிக்கி யென்னுளிர்க் குடிகொண்டு
வசைபோ புனைக்க வருவாய்
சத்திரத்திலுஞ் சோலையிலுஞ் சாலையிலும்மற்ற
டாகத்திலுஞ் சாவடியிலும்
தாய்போ லெதாரத்தைக் கருதியே யான் காந்து
தங்கியே சிந்தனிக்க
இத்தரையி லப்பன முறுத்தவடை பொரிகடலை
இனிய மோதக முக்கனியும்
என்றுதுண்டைப் பச்சைப்பயிறு மொச்சைகளுண்ணும்
எலிவாகனக் கடவுளே

## சூத்திரதார்வசனம்

ஐயன்மீர்!

சதா ஜீவகாருண்யம் நிறைந்ததம்பி, சரிகைக்கிரியையோக ஞானமென்னும், நான்கு படிகளையுங்கடந்து சல்லோக சாமீப சாரூப சாயுச்சிய மென்னும் பதவிகளை யடையுதற் கேதுவாகிய சத்தியத்தை நிலைநிருத்தி, நன்றாது வாழ்வைக் கொடுத்ததற்கே விதிவுறும், இம்மாசதிமை தங்கிய, அரும்பெரும் புவியினைச் சூழ்ந்து வளைந்திலகும் கல்விக் கடலைக் கடைந்தமுதம் புசிக்கவேணுமெனக் கருதிய கவிவல்லோர்க்கும், கலையற்ற மெஞ்ஞானிகட்கும், கடந்த விவேகிகட்கும், இச்சபா சனதனவான்களுக்கும், அடியேன் சூத்திரதாரெனது அன்பார்ந்த வந்தனம்.

அன்றியுமினியொன்று, அதாவது தற்சமையம், நவரசங்களும் பொருந்திய நாடகமொன்றை, நடாத்துவிக்க வென்னிடம், அஷ்டரசங்களும் பொருந்தி, யதற்கு ஆசிரசம்வொன்றுமாத்திரக்குறைவாக இருக்கிறபடியால், அதற்கிசைந்த வாசிய பூமானொருவன் எவ்வழியில் வந்தகப்படுவானென் றெதிர்பார்க்கிறேன்.

## ஆசியன்தோற்றம்

அர்ப்பூத பூதம் மகளாகிய என்றமெட்டு

ஆகமவேத முறைப்படியிரு கருவானதூறி அதற்
கப்புரங்கைகால் தலைக்கண்வாய்செவி மூக்கெனத்தேறி நல்ல
தேகமெனும் முருவாகியே பையூர்க் கோட்டையுமீறி வெகு
திறமிகுமிப்பொய் பூரிணக்காண சீக்கிரம் வெளியேறி

வேகமதாயிங்கோடி வந்து
விளையாடிக்கொண்டாடி நற்
சாக்சமுறையினை நாடி சண்முக
தாசனுரைப்பதம் பாடி

தர்ச்சமையம்
அச்சமிலா
திச்சபையில்
மெச்சிடவே
பம் பம் பள பளவென—ஆ

## கலித்துறை

குளத்திற்கு வருகிருந்து குட்டிகள் வாங்குதற்குக்
களத்தினை விடுத்து தாய்க்குந் தந்தைக்கு முன்னேறுனி
வுளத்தினிற் ருயைப்போலே வுலகிற்பெண் தேடியேபோர்
களத்திற்குப்பின்னே நிற்குங் கணபதி காப்புதானே

சலபல்கேற நாறி தேறி யென்றமெட்டு

ஆறுதலைக்கும் பெரிய      ஐந்துதலைக்குஞ் சிறிய
வரனாறுதலையே மனது      வை வை வை
வேறுதலையிலைத் தனையிது      மெய் மெய் மெய்
தேறுதலையாக் இருடைச்      செய் செய் செய்
மாறுதலையின்றி யினக்கோறுதலைச்      செய்யவெந்தன்
சேருதலை யாகவந்து      நில் நில் நில்
ஏறுதலையாம் மதியைச்      சொல் சொல் சொல்
மீறுதலையை யெதிர்த்து      வெல் வெல் வெல்
கூறுதலையின்றி மனச்      சோறுதலைநீக்கி நலஞ்
சாறுதலையாக வரந்      தா தா தா

நாந்தேன் வந்தனம் — சபையில்
நமியேனிங்கனம்

இந்தவுலகினி லில்லாத      பேர்க்கும்
எறவிட் டேணியை வாங்கிடு      வோர்க்கும்
செந்தமிழ்க் கெதிர்தனைப்      படியார்க்கும்
தெம்மாங்குப் பாடித்திரிந்      தலைவோர்க்கும் (நந்)
பள்ளிக் கூடந்தனைப் பாராத      பேர்க்கும்
பக்தியற்றப் பரதேசியா      வோர்க்கும்
தெள்ளிய பட்டைத் திருடிய      பேர்க்கும்
தேடி யுண்ணுமற் புதைத்துசா      வோர்க்கும் (நந்)
கொக்கைப் பிடிக்க வெண்ணெய்த் தேடு      வோர்க்கும்
குடியிருந்த வீட்டில் கொள்ளி வைப்      போர்க்கும்
செக்கைப் பிடுங்கி யெண்ணெ வடிப்      போர்க்கும்
தெய்வ மூன்றென்றென்று சிந்தியாத      பேர்க்கும் (நந்)
அன்னத்தில் வின்னங் கலந்திடும்      பேர்க்கும்
ஆட்டுக்கிடா முட்டை வாங்கிச் செல்      வோர்க்கும்
இன்னக் குணத்தை மறவாத      யார்க்கும்
தீட்டின மரத்திற் கூறைப் பார்ப்      போர்க்கும் (நந்)
தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டிடு      வோர்க்கும்
தனையின் றெனைன் றறிந்திடாப்      பேர்க்கும்
அலையைப் பிடிக்கப்பை கொண்டுபோ      வோர்க்கும்
ஆர்க்கு மடங்கா தலைந்திடும்      பேர்க்கும் (நந்)
இருதலைக் கொள்ளி யெறும்பான      பேர்க்கும்
ஏழுபேர்க்கு மசடிகட்டி      யியார்க்கும்
சருதலை ஞாயத்தைக் கேட்டிடும்      பேர்க்கும்
சத்திய வாக்க தனைவிடத்      தேகர்க்கும் (நந்)

வீட்டு விளக்கென்ற முத்திடு — வோர்க்கும்
வேமையைக் கருமமென் றருதிய — பேர்க்கும்
கோர்ட்டுக்குச்சேர்த்துப்பொருள்கொடுப்போர்க்கும்
குடிக்குலாவிச குடிகெடுப் — போர்க்கும் (நக்)

பிடிசிக்ரெட்டு கஞ்சா பிடிப் — போர்க்கும்
பிச்சைகேட்டால் தடிகொண்டு செல் — வோர்க்கும்
வெடிக்கையாய் வைப்பு வைத்திடும் — பேர்க்கும்
வெள்ளை வெட்டை மறையாப்பு கொண் — டோர்க்கும் (நக்)

## விகட வாழ்த்துதல்

### நாதுந்தி நாதுந்தி யென்றமெட்டு

பிடிசிக்ரெட்டு சுருட்டு — கஞ்சா கோவி
குடியென்றும் வாழ்கவே — அபின் மருந்து
வாடிக்கையும் — வாழ்கவே
சாருயக் கள்ளுதின் பிரு — பிருந்தியிலை
மாருமனும் வாழ்கவே — விலைக்குறைவு
சோரமனும் — வாழ்கவே
வெள்ளை மறையாப்பு வெட்டை — பிலைவிகொள்ளைக்
கொள்ளையதாய் வாழ்கவே — ஆஸ்பத்திரியதற்
குள்ளபடி — வாழ்கவே
திருட்டும் வருட்டும் — புரட்டும்பிரட்டும்
நாட்டும் மிகவாழ்கவே — சென்ற ஜெயிலுள்
விருட்டரையும் — வாழ்கவே

## விகட வந்தனவசனம்

ஐயா பிரபுக்களே! இம்மாதிரிமை தங்கியமகாசபையோர்க்கு ஆஸ்யன் வென்ற அன்பார்ந்த ம், ளம், தனம், ந்தனம், வந்தனம் அதாவது எண்ணெறவாசித்து எழுத்தறக்கற்றில்லாதவர்க்கும், ஏராளமான பணத்தைத் தாராளமாக சேர்ந்து மியாதவர்க்கும், பசிக்குதென்று வந்தால் தடிகொண்டு மாட்டும் பத்தர் கட்கும், பக்தியிற்றேர்ந்த பாத்திரதையடையார்க்கும், பஞ்ச பூதங்களையும் வொனறுபடுத்தி பணியாதோர்க்கும், பாவலராய் வெளிவந்து பாட்டைத் திருடுவோர்க்கும், தாயை வெறுத்த பிள்ளைக்கும், பிள்ளையை வெறுத்த தாய்க்கும், தந்தையை வெறுத்த மகனுக்கும், மகளை வெறுத்த தந்தைக்கும், அண்ணனை வெறுத்த தம்பிக்கும், தம்பியை வெறுத்த அண்ணனுக்கும், தமியேனுடைய தடைவந்தனம். அன்றியு மிவ்விடத்திலோர் வொரு சார் தோன்றி இருக்கின்றார் அருகிற் சென்று அவரையாரென்று விசாரிப்போம், அருகிற்சென்றுகதைத்தல்

ஆ-வம். குட்மானிங் சார்!

கு-வம் அப்பா நீயார்

ஆ-வம் நான் யாரோ சார் யெனக்குத் தெரியாது

கு-வம் என்னப்பா, நீயாரென்று கேட்டால் நான் யாரோ யெனக்குத்தெரியாதென்றுதான் சொல்கிறதோ

ஆ-வம் ஆமாம் சார்

கு-வம் என்ன ஆமாம் சார் வுன்னையே வுனக்குத்தெரியாதென்றால்? யென்னை யுனக்கு யெப்படித்தெரியவரும்

ஆ-வம் என்னங்க சார் நீங்கள் பேசுகிறது பயித்தியக்காரத்தனமாயிருக்கிறது, கண்ணிருக்கிறபோது யேன் தெரியவராது?

கு-வம் அப்பா கண்ணிருந்தால் வுடலைத் தெரிந்துக் சொள்ளலாம் உள்ளத்தைப் பார்க்க முடியுமா?

ஆ-வம் தடையன்னியில் பார்க்க முடியும்

கு-வம் அதெப்படி பார்க்க முடியும்?

ஆ-வம் உலகில் நடக்கக்கூடிய விநோதங்களை யெல்லாம் நாம் நேத்திரத்தினுல் தானே பார்க்கிறோம் ஆதலால் பார்க்க முடியும்

கு-வம் அப்பா நடந்த விஷயங்களைப் பார்ப்பது கண்ணுலே இனி நடக்கப் போகின்றதுகளை பார்க்கிறது யெதனுலே?

ஆ-வம் நடந்ததுகள்போக இனிநடக்கப்போகின்றதுகள் வெளியே வந்தால் பார்ப்பது கண்ணுல்தான்

கு-வம் சரியிருக்கட்டும் வுள்ளத்தைப் பார்ப்பது எப்படி?

ஆ-வம் சார் உள்ளத்தைப் பார்பதென்றால் கத்தியால் பார்த்துக் கொள்ளலாம்.

கு-வம் என்னப்பா நீ பேசுவதெல்லாம் யெறுக்குமாருகவே பேசுகிறாய் கத்தியால் கிழித்தால் உயிர்போய்விடாதா?

ஆ-வம் என்னங்க சார் நீங்கள் பேசுகிறது அதிசயமாகவிருக்கிறது உலகில் கத்தியால் கிழித்தும் வுயிரோடு இருக்கிறவர்களை நீங்கள் பார்த்ததில்லையா?

கு-வம் நல்லது இருக்கட்டும் வுன்னுடைய வார்த்தைகளெல்லாம் வேறுவிதமாகப் போகின்றது, மேதை ஞானிகள் மனக் கண்ணுலேதான் உள்ளத்தைப் பார்க்க வேணுமென்கின்றூர்களே அதெப்படி?

ஆ-வம் என்னங்க சார் நீங்களுக்தெரியாமல் பேசுகிறீர்களே மனுஷியோயாவது கண்ணிருக்கிறதாவது பார்க்கிறதாவது சொன்னதாவது கேட்டதாவது விடுங்கசார் இதுகளெல்லாம் வெறும்

பொய், களவில் இன்னைதும், பெண்டதும், ஜாலங்கினைதும், வெழுத் தனும், திரிக்கதனும், அலைக்கதனும்தான் கண் கண்ட பலன் சாச் மற்றதையெல்லாம் சுத்த பூஜ்ஜியம் சார்தம்பா இபுக்கள்

ரு-வம் பேஷ் நீ நல்ல புத்திசாலி, சேர்க்காதும் எத்தனைகோடியும் உன்னோடுதான் சேர்ந்து இருக்கவேண்டும் இதையெல்லாம் இருக்கட்டும் இனியொன்று அதாவது நீ பொதுவாக?

ஆ-வம் ஐயா நான் வித்துரு

ரு-வம் என்னகரம்?

ஆ-வம் தக்ககரம்

ரு-வம் எத்தேசம்?

ஆ-வம் வத்தேசம்

ரு-வம் எத்தலம்?

ஆ-வம் வைத்தலம்

ரு-வம் எட்டவன்?

ஆ-வம் செட்டவன்

ரு-வம் எத்தப்பட்டி?

ஆ-வம் தம்பம்பட்டி

ரு-வம் என்னப்பா நீயெதைக்கேட்டாலும்மாறுதலாகவே சொல்லுகிறாய், இருக்கட்டும்,

நீயென்னஜாதி?

ஆ-வம் பெருஞ்ஜாதி

ரு-வம் என்ன குலம்?

ஆ-வம் ஆகுலம்

ரு-வம் என்ன இனம்?

ஆ-வம் வல்லினம்

ரு-வம் என்னவர்ணம்?

ஆ-வம் பஞ்சவர்ணம்

ரு-வம் என்னகூட்டம்?

ஆ-வம் பேசக்கூட்டம்

ரு-வம் என்னவம்சம்?

ஆ-வம் கல்பிசம்

ரு-வம் என்னபிள்ளை ?

ஆ-வம் ஆண்பிள்ளை

ரு-வம் எம்மதம் ?

ஆ-வம் சம்மதம்

ரு-வம் பேஷ் இதுவும் நல்லமாதிரிதான், நானொன்றுகேட்க நீ ரொன்று சொல்கிறது இதுபோகட்டும்

என்ன வருணம்

ஆ-வம் பட்டை நாமம்

ரு-வம் சரிதான் சரிதான் நான்உன்னைக்கேட்டதே பிசகுதப்பித கென்று நினைக்கிறேன் இருக்கட்டும் உனக்கென்னதொழில்

ஆ-வம் கைத்தொழில்

ரு-வம் என்னவேலை ?

ஆ-வம் வீண்வேலை

ரு-வம் என்ன அலுவல் ?

ஆ-வம் வெட்டியலுவல்

ரு-வம் என்னவியாபாரம் ?

ஆ-வம் ஒயாபாரம்

ரு-வம் என்னமுயர்ச்சி ?

ஆ-வம் விடாமுயர்ச்சி

ரு-வம் பேஷ் போதும் போதும் நானுன்னைக்கேட்டு தெரிந்து கொண்டது சரி நீர் போய்வாரும் நேரமாச்சுது

ஆ-வம் என்ன சார் கோபமா ?

ரு-வம் கோபமில்லை யெரிச்சல்தான்

ஆ-வம் ஏன் சார் அப்படி ?

தண்ணீர் கொண்டுவரட்டுமா ?

ரு-வம் எதற்குத்தண்ணீர் ?

ஆ-வம் எரிச்சலை அணைக்க

ரு-வம் தண்ணீரும் வேண்டாம்வொன்றும் வேண்டாம்நீர்போய் வாரும் வீட்டிற்கு நேரமாச்சுது

ஆ-வம் சார்! நீங்கள் இப்படி வருத்தப்பேர்ட்டால் நான் யெப்படி பொருக்கிறது அப்படிக்கெல்லாம்கோபிச்சுக்கொள்வது நல்ல தல்ல, யேதோநான் செய்தது தப்பிதமாயிருந்திட்டப் போதி லும் யென் காலைப் பிடித்துக்கொள்கிறேன் நீங்கள் மனதிலே கருவாட்டை வையாதியுங்கள், அன்றியும் நீங்களேஇப்படித்தப் பெடுத்தால் நானென்ன கிட்டமிர்க்கமுடியுமா? முடியாது நீங் களோ பெண்பிள்ளை ஆண்பிள்ளையைப் பெற்றிருக்கக்கூடிய பெரியவா ஆதலால் கோபத்தைக்கொஞ்சம் சபர்செய்யுங்கள்

ரூ-வம் சரி இருக்கட்டும், பொருத்துக்கொண்டேன், இப்போதச வது. நான் கேட்டதற்கு பதில் சொல்லேன் பார்ப்போம் எதுவுனது ஊர்?

ஆ-வம் ஐயா நான் வசிப்பது கடவுள் கல்லு

ரூ-வம் அதென்னப்பா கடவுள் கல்லுயென்பது?

ஆ-வம் ஐயா! கடவுள் என்பது சுவாமி, கல்லுயென்பது மலை, ஆக இவ்விரண்டையுஞ் சேர்த்துப்பார்த்தல் சுவாமிமலையென் றாகும் ஆதலால் நான் வசிப்பது சுவாமிமலை,

ரூ-வம் மித்திரா! சுவாமிமலையிலெவ்விடம்?

ஆ-வம் ஐயா! சுவாமிமலையில் யான் வசிப்பது பூமி சாமர்த்தியம்

ரூ-வம் அதென்ன அப்பா! பூமி சாமர்த்தியம்?

ஆ-வம் ஐயா! பூமி என்பது கு, சாமர்த்தியம் என்பது கை, ஆக இவ்விரண்டையுஞ் சேர்த்துப்பார்த்தால் குகை யென்றாகும், ஆதலால் யான் சுவாமி மலைக் குகையில் வசிக்கக்கூடியவன் சரிதானா?

ரூ-வம் மித்திரா மெத்தசந்தோஷம் வுனது தாய் தந்தைகள்யார்?

ஆ-வம் ஐயா! எனது தாய்தந்தைகள் முட்டாள்கள்

ரூ-வம் அதென்ன முட்டாள்யென்பதாகத் தெரிவிக்கின்றாய் தாய் தந்தைகளின் மீதில் யேதேனும் வருத்தமோ?

ஆ-வம் வருத்தமில்லை வுண்மையாகவே முட்டாள்கள் தான்

ரூ-வம் மித்திரா! அப்படியும் வொருமனிதருண்டா?

ஆ-வம் ஆமாம் வுண்டு, அதாவது மூட்டென்பது ரூதகம் ரூதகம் என்பது நிட்டு, நிட்டென்பது இரத்தம், இரத்தத்திலுண்டானது சரீரம், சரீரத்திற்குப் பேர் ஆள், ஆதலால் மூட்டாளனென்று பெயராகும் எனது தாய்தந்தையர்கள் மூட்டாளனாகும்

ரூ-வம் பேஷ்பேஷ் மித்திரா! மெச்சினேன் இதுகளெல்லாமிருக்கட்டும் எனக்கு நன்றாக விளங்கக்கூடியதாக வுனது வித்தாரத்தங்களை சொல்வாய்பார்ப்போம்

ஆ-வம் நல்லது அப்படியே ஆகட்டும் கேளுங்கள் தெரிவிக்கின்றேன் எனது தாயின் பெயர் மதர்

ரூ-வம் மித்திரா! மதர் என்றால் தாயென்று யார்க்குந் தெரிந்தது தான் வுன்னதைச்சொல் ?

ஆ-வம் நல்லது கேளுங்கள் எனது தாயின்பெயர் மதர் மதர்

ரூ-வம் அதென்ன மதர் மதர் என்பது கேலியா ?

ஆ-வம் அல்ல; யெனது தந்தையார் அம்மா அம்மா வென்று தான் கூப்பிடுகிறது, ஆதலால் மதர் மதர் வழக்கம் என்றேன்

ரூ-வம் சரியிருக்கட்டும் ஊரில் கூப்பிடுகிறதெப்படி?

ஆ-வம் ஊரில் கூப்பிடுகிறதா? மதர் ஐ மதர் யென்று கூப்பிடுவார்கள்

ரூ-வ-ம் அதென்னப்பா மதர் ஐ மதர் என்கிறாய்?

ஆ-வ-ம் ஆதாவது மதர் என்பது அம்மா, ஐ யென்பது கண்ணு மதர் என்பது அம்மா, ஆக இந்த மூன்றையும் சேர்த்துப்பார்த்தால் அம்மாக்கண்ணு அம்மாள் என்றாகும் ஆதலால் என தாயின் பெயர் அம்மாக்கண்ணம்மாள்

ரூ-வம் மித்திரா! இதிருக்கட்டும் வுனது தந்தையின் பெயரென்னவோ அதைக் கொஞ்சம் சொல்பார்ப்போம்

ஆ-வம் ஐயா! எனது தந்தைபெயர் தொளோபாப்பேட்டோ, அதாவது தொளோ வென்பது கண், பாப் என்பது ஐயா, பேட்டோ வென்பது பிள்ளை, ஆக இம் மூன்றையுஞ் சேர்த்துப்பார்த்தால் கண்ணையாபிள்ளை யென்றாகும எனது அண்ணன் பெயர்தேவுடு கேத்திரபிட்ட, அதாவது தேவுடு யென்பது தெலுங்கில்சுவாமி

சேத்திரம் என்பதுகண் பிட்டையென்பது பிள்ளை, ஆகயிம்மூன் றையுஞ் சேர்த்துவாசித்துப் பார்த்தால் சுவாமிகண்ணுபிள்ளை யென்றாகும், எனது தங்கையின் பெயர் ஆக்மா அதாவது இந் துஸ்தானில் ஆக் என்பது கண்; மா வென்பது அம்மா ஆக இவ்விரண்டையுஞ் சேர்த்துப்பார்த்தால் கண்ணு அம்மாள் என்றாகும் எனது தங்கையின்பெயர் கண்ணம்மாள், என்னு டைய பெயர் தந்தைகடவுள்மகன் அதாவது தந்தை என்பது ஐயா கடவுள் என்பது சாமி மகன்என்பது பிள்ளை, ஆக இம் மூன்றையுஞ் சேர்த்துப் பார்த்தால் ஐயாசாமிபிள்ளை யென்றா கும் ஆதலால்எனது பெயர்ஐயாசாமிபிள்ளை ஐயாவேறென்ன சமாச்சாரம்

கு-வ-ம் நல்லது மித்திரா! இது வரையக்கும் தாம்சொன்ன தெல்லாம் கேட்டு ஆனந்தமடைந்தேன், இப்போது தாங்கள் வெங்கெங்கெல்லாம் போய் வருகிறீர்களோ? அதுகளைச் சற் றெனக்குச் தெரிவி பார்ப்போம்

ஆ-வ-ம் ஆகட்டும் கேளுங்கள் தெரிவிக்கிறேன், ஐயா! நான் அழகு சிவிடிகாம் என்பதிற்கு வந்தேன், அதாவது அழகு என்பது திரு, சிவிடி என்பது ஆங்கிலேயத்தில் சிறம், காம் என்பது இந்துஸ்தானில் ஊர், அதாவது புரம், ஆக இம் மூன்றையுஞ் சேர்த்துப் பார்த்தால் திருசிறபுர மென்றாகும், ஆதலால் திரு சிறபுரம் வந்து, அதன்பின் தாய்தந்தை நாய் தமக்கை தேசத் திற்கு வந்தேன், அதாவது தாய் என்றால் அம்மா, தந்தையென் றால் ஐயா நாய் என்றால் நாய் தமக்கையென்றால் அக்கா, தேச மென்றால் ஊர் ஆக இவ்வைந்தையுஞ் சேர்த்துப்பார்த்தால் அம்மா ஐயா நாய் அக்காள் ஊர் என்றாகும். ஆதலால் நான் அம்மய்யநாயக்க னூருக்கு வந்தேன்

கு-வ-ம் சபாஷ் மித்திரா! சரி யதைவிடுத்து யெங்கு புறப்பட்டாய்

ஆ-வ-ம் சார்! அதைவிடுத்துநேரே மேடுபள்ளத்திற்குப் போனே ன், அதாவது மேடு என்றால் மலை, பள்ளம் என்றால் ஆழம் ஆக இவ்விரண்டையுஞ்சேர்த்துப்பார்த்தால் மலையாழம் என்றாகும் அதாவது மலைபாழத்திற்குப்போய் அங்கிருந்து நேரே செல் வக்கிழகரிபரிவேடத்திற்கு வந்தேன், அதாவது செல்வம் என் றால் திரு, கிழகரி என்றால் ஜெர்அ, பரிவேடம் என்றால்ஊர் ஆக இம்மூன்றையுஞ் சேர்த்துவாசித்தால் திருச்செந்தூரென்றாகும் அதாவது திருச்செந்தூருக்குவந்தேன் இங்ஙனமூங்களைப்பார்த் தேன் வேறென்ன சமாச்சாரம் சார்!

ரு-வ-ம் மித்திரா! இதுகளெல்லாம் மிகுந்த சந்தோஷம் உன்னுடைய பெயரென்னவோ அதனைச் சற்றெனக்கு தெரிவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்

ஆ-வ-ம் சார்! என்னுடைய நாமதேயத்தையானே புகழ்ந்து சொல்லவதென்ருல் அநேக விதங்களுண்டு, ஆதலால் அதைச் சொல்லட்டுமா? வேண்டாமா?

ரு-வ-ம் மித்திரா! ஊரில் புகழக்கூடிய வுன்னுடைய பெயரைத் தெரிவிப்பதற்கென்ன வெட்கமா?

ஆ-வ-ம் அதொன்றுமில்லை கேளுங்கள் என்னுடைய நாமதேயத்தைச்சொல்கிறேன்

| | |
|---|---|
| ஆஸ்யமெஞ்ஞானத் | தங்கம் |
| ஆஸ்யவித்வப்பிர | சங்கம் |
| ஆஸ்யவைராக்கிய | சிங்கம் |
| ஆஸ்யமாநிபுணத் | துங்கம் |
| ஆஸ்யரகஸ்யாதி | மந்திரன் |
| ஆஸ்யவிவகாரச் | சந்திரன் |
| ஆஸ்யவுபகாரச் | சந்திரன் |
| ஆஸ்யவுத்தண்ட | தந்திரன் |
| ஆஸ்யவுத்தண்ட | மந்திரன் |
| ஆஸ்யவீராதி | வீரன் |
| ஆஸ்யசெல்வக் | குபேரன் |
| ஆஸ்யலா | வண்யன் |
| ஆஸ்யமா | கன்யன் |
| ஆஸ்யசற் | புண்யன் |
| ஆஸ்யயோ | காதிபன் |
| ஆஸ்யதே | சாதிபன் |
| ஆஸ்யமித்தி | ராதிபன் |
| ஆஸ்யபுத்தி | ராதிபன் |
| ஆஸ்யசக் | ராதிபதி |
| ஆஸ்யவிக | டாதிபதி |

எனவும் இன்னுமனேகவிதமான சமயதேயங்களும்மெனக்குண்டு தாய் தந்தையர்களாலே யேற்பட்டப்பெயர்களும் வேறுண்டு தெரியவருகின்றதா சார்?

ரு-வ-ம் மித்திரா! உனக்கு உன்னுடைய தாய்தந்தையரால் யேற்பட்டபெயரென்னவோ அதனைச்சொல்பார்ப்போம்

ஆ-வ-ம் ஐயா! தர்க்காலம் யெனக்கு ஊரில் விளங்கக்கூடிய நாமதேயமானது இம்

| | | |
|---|---|---|
| ரு-வ-ம் | என்ன | ம்? |
| ஆ-வ-ம் | | கம் |
| ரு-வ-ம் | என்ன | கம்? |
| ஆ-வ-ம் | | ங்கம் |
| ரு-வ-ம் | என்ன | ங்கம்? |
| ஆ-வ-ம் | | சங்கம் |
| ரு-வ-ம் | என்ன | சங்கம்? |
| ஆ-வ-ம் | | ரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | ரசங்கம்? |
| ஆ-வ-ம் | | பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | ப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | ப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | டப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | டப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | கடப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | கடப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | விகடப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | விகடப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | தவிகடப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | தவிகடப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | னோதவிகடப்பிரசங்கம் |
| ரு-வ-ம் | என்ன | னோதவிகடப்பிரசங்கம்? |
| ஆ-வ-ம் | | வினோதவிகடப்பிரசங்கம் |

ரூ-வ-ம் என்ன விநோதவிகடப்பிரசங்கம்?
ஆ-வ-ம் பவிநோதவிகடப்பிரசங்கம்
ரூ-வ-ம் என்ன பவிநோதவிகடப்பிரசங்கம்?
ஆ-வ-ம் சிபவிநோதவிகடப்பிரசககம்
ரூ-வ-ம் என்ன சிபவிநோதவிகடப்பிரசங்கம்?
ஆ-வ-ம் ஆசிபவிநோதவிகடப்பிரசங்கம்

ரூ-வ-ம் பேஷ் பேஷ் மிகுந்த சந்தோஷம் மித்திர இதுகளெல்லா மிருக்கட்டும், யான் ஒன்றெத்தனித்திருக்கின்றேனதையுன் னிடந்தெரிவிக்கட்டுமா? வேண்டாமா?

ஆ-வ-ம் சார் நான்றாகத் தெரிவிக்கலாம் பயமென்ன

ரூ-வ-ம் மித்திரா! இவ்வரங்கமேடையில் நாடகமொன்றை நடாத்து விக்கவென்னிடம் அஷ்டரசங்களும் பொருந்திஆசிரசம் வொன் றுமாத்திரங் குறைவாக இருக்கிறபடியால் நாம் இவ்விடத்தில் இருக்க முடியுமா? முடியாதா வென்றுகேட்கத்தான் யோசனை செய்ததேயல்லாது வேறொன்றுமில்லை

ஆ-வ-ம் ஐயா! அப்படியே தங்களிஷ்டம்போல்இருக்கச்சித்தமாக விருக்கிறேன் இதற்கென்ன தடை

ரூ-வ-ம் அப்படியானால் அதற்கு தகுந்த ஆசியகதையொன்றுசொல் லுவாய் பார்ப்போம்

ஆ-வ-ம் நல்லது சார் அப்படியே ஆகட்டும் தாங்களுடைய பெய ரென்னங்க சார்?

ரூ-வ-ம் அப்பா என்னுடைய பெயர் நாடகத்திற்கு முதல்கருவி யாகிய ஸூத்திரதார் என்று பேர்

ஆ-வம் ஓஹோ! அப்படியா மிகுந்த சந்தோஷம் ஆட்டுவைக்குங் குருவியா சரிதான் சரிதான்

ரூ-வம் மித்திரா குருவியல்ல கருவி

ஆ-வம் நல்லது ஆட்டுவைக்குங் கருவியா இருக்கட்டும் பிரம்மா னந்தம் கொஞ்சந்தயவுசெய்து கேளுங்கள்

## துணிந்து சாப்பிட்டவன் கதை

ஐயா! ஒருவூரில் ஒருமனிதன் ஒருகுடியானவன் வீட்டிற்குப் போய் அம்மாபசிக்குதென்றான், அதற்கவள் ஐயா இப்பதான் ஆகுதென்றாள் அதற்கவன் அம்மா ஆகட்டும் மௌனமாக தெருவிலிருக்கிறேனென்றான் அதற்கவள் இருந்தாலும் போடமுடியாது யென்றாள் அதைக்கேட்டவன், உங்களுக்குப்போடச் சிரமமாயிருந்தால் நானுவதுபோட்டுசாப்பிடுகிறேனென்று, உட்சென்று சாதத்தையிலையில்போட்டு சாப்பிட்டுக்கொண்டிருக்க, அந்தம்மாள் பார்த்து ஈதுயோ முறையோவென்று நெஞ்சிலடித்துக்கொண்டுபோய், அந்த வீட்டில் சீட்டு விளையாடிக்கொண்டிருக்கும் தன்னுயசனிடஞ்சொல்லியழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து பார்க்க, அவன்சாப்பிட்டுவிட்டு கையைக்கழுவிக்கொண்டு வெளியில்வர, அவ்வீட்டுக்காரனுக்குக் கோபமதிகரித்து, அடே மடையா! நீயெப்படி நெஞ்சஞ்சாமல் எனது வீட்டில்வந்து சாப்பிடலாமென்று காலைக்கு அடியடித்துக் கேட்க, அதற்கவன், ஐயா! யேனென்னையடிக்கிறீர்கள் அடிக்க வேண்டாம், ஒளபாட்டியவ்வையானவள், அறஞ்செய்யவிரும்பு யென்றும், ஐயமிட்டுண் யென்றும் யெழுதிவைத்து இருப்பதைநீர் அறியவில்லைபோலும் அறிந்திருந்தால் என்னை நீர் அடிக்க மாட்டீர் ஆதலால் யான்மனம் பொருத்தேன், உனது குற்றத்தை மன்னித்தேன், யென்று கோபித்துக்கூற அதைக்கேட்ட வீட்டுக்காரன்மிகவுங்கோபங்கொண்டு, பிறகும் காலைக்கு அடியடித்து, பாபாவென்று மேலான அதிகாரியிடத்தில் இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தி சங்கதிகளைச்சொல்ல, அதற்கு, யாசகன் துரையெஜமானவர்களே! நான் சென்று அம்மா பசிக்குதென்றேன் அதற்கவர்கள், இப்பதான் ஆகுதென்றார்கள் அதற்குநான் ஆகட்டும் இருக்கிறேனென்பதாகச்சொன்னேன், அதற்கவர்கள், இருந்தாலும் போடமுடியாதென்றார்கள் உடனேயான் எதோவகைவேலையாக இருக்கிறார்கள் போலிருக்கிறது யென்றெண்ணி, யானே உட்சென்று சாதத்தைபோட்டுக்கொண்டு சாப்பிட்டேன், அதற்குள் இவர் வந்து, நான் சம்பாதிக்க நீயெப்படியடா சாப்பிடலாமென்று கையையோங்கி யென்னையடியடியென்று அடித்துவிட்டார், ஆதலால்பாட்டியவ்வை சொன்னபடியான்சாப்பிட்டதுஞாயமா? ஞாயத்தவறுதலா? யென்றுபார்த்து தர்மயெஜமான்

அவர்கள் தீர்ப்புசெய்யும்படி பிரார்த்திக்குறேன் என்றான், அதற்கு துரை அதைகேட்டு, ஏ குடியானவனே நீசெய்தது மிகுந்ததப்பிதம் அவன்செய்தது ஞாயம்ஆதலால்நீசெய்ததப்பிதத்திற்காக,இன்னும் பத்துநாளைக்குச், சரியானபடி தயிர்பால்நெய்இவைகளோடும் பல காயபக்ஷணங்களோடும் மிட்டாய் கனிவர்க்கங்களோடும்,அவனுக்கு விருந்துசெய்தனுப்ப வேண்டுமெனத் தீர்ப்புசெய்தார். அதுகேட்டு குடியானவன் பயந்து அப்படியே ஆகட்டுமென்று அவனையழைத்துக்கொண்டுபோய் பயபக்தியோடும் விருந்துசெய்து அனுப்பிவைத்தானும், அங்கே சாப்பிட்டவன் என்னிடத்தில் வந்து அதை யெப்படிச்சொன்னானென்றால்

கன்னக்கோலின்பெருமை யென்றமெட்டு

ஐயா! வைபோக மானவிருந்து இன்றெனக்கு
வாய்த்ததோரிடத்திலிருந்து அங்கவர்களின்
கைப்பாகந்தன்னைப்புகழ்ந்து எடுத்துமுணங்
கழறுவேன்கேளும்மகிழ்ந்து நல்ல

அப்பளமு ளுந்துவடை
ஆசைவைத்தரு மெள்ளடை
ஒப்பிடுஞ்ஜி லேப்பிபூரி
உண்ணத்திகட் டாக்கேசரி

அதிரசம்மைசூருபாக்கு பாதம்பருப்பேர
டல்வாரவாலாடுகேக்கு சுடச்சுட
புதியகொக்கல்போளிஜோக்கு கண்பருப்பி
பூந்தியிம்மர்த்தியோர்போக்கு இன்னமுங்கேளு

பத்தாசுக சியம்பேணி
பால்கோவா ஜீராசிரணி
மெய்த்தகுலாப் புஜாநேடு
மேலானநெய்த் தோசைஜூடு

ஜொஞ்ஜியப்பங்காராசேவு இட்டலிசட்னி
தொட்டுத்தின்றிடவென்றுவக் கிசைக்குதொரு
பஜ்ஜிகாப்பிபுப்புமாவு தூள்பஹோடா
பாகத்தோடித்தரைமேவு யினிய

மாங்கனிபி லாக்கனி
மணிலாக்கனி கொய்யாக்கனி

தேங்கமழ் வா — ழைக்கனி
சீதாக்கனி யா — புள்கனி

ஆரஞ்சி பம்புளிமாசி — மாதுளை முந்திரி
யதனுடனே யன்பாசி — மேலான ஜாதி
நார்த்தன் மேலாந்தர்ப்பூசி — கிச்சலிபல
நாகரீக விதராசி — ஆனையிவைகளை

முதல்முதலிலே — தன்னில்
முக்கியமாகவைத் — தென்முன்னில்
அதன்பின்சாதம் — படைத்து
அளவின்றிநெய் — விடுத்து

அவிட்டவிரண்டு வகையும் — வறுவலொடு
அவியலிரண்டு வகையும் — பொரியலொடு
துவட்டலிரண்டு வகையும் — பொடிமாசொடு
சோமாசியிரண்டு வகையும் — இன்னுமநேக

பச்சடியொடு — சாம்பாறு
பருப்புரசம் — தயிர்மோரு
கிச்சடிமிக — வஞ்சிரு
கேட்குமுன் — விளவென்னீரு

இப்படிக்கி யொருவீட்டில் — படைக்கயிசைக்
கிழுத்து மெனதுபாட்டில் — எழுந்தான்
அப்படியே மெயில்போட்டில — ஏறிமின்னிங்கு
அன்புடன் வந்தேனிந்நாட்டில் — இச்சமயம்

ஆ-வம் இந்தவிதமாகிய ஆனந்த விருந்தை யருந்தி இவ்விடம்வந்து விட்டேனென்பதாக வென்னிடத்திற்சொல்லிக்கொண்டேவந்தான் அவனிடத்தில் யான் கொஞ்சம் பொடிகேட்டேன், அதற்கவர் என்னையா தங்களைப்பார்த்தால் பெரியடம்பமாக விருக்கிறது ஓசிப்பொடி கேட்கிறீரேயென்றார் அவ்விடத்தில் அவர்க்குயான் சொன்னகவியானது

அகவற்பாவிற்கு-அகவற்பா

ஓசிப்பொடியை — யுடனேவாங்கி
நாசியிலேற்றி — நன்றாயிழுக்கில்
காசிக்குச்சென்று — கடவுளைநேரே
பூசித்ததவாய்ப் — புகழ்ந்ததுமன்றி
தேகியாகவும் — செவ்வையதாகப்

பேசிடுமென்றுப் பிரபல்யமதாய்
ஆசியனின்று வறைந்ததினாலே
கூசிடவேண்டாம் கொடுப்பீர்பொடியே

ஆ-வம் என்றுபாட, உடனே அவர் இந்த பொடியானது, எதற்கழகு இதையேன் போடவேண்டும், போட்டதினால் என்னலாபம் என்றுவினவினார், அதற்குயான்சொன்னகவியானது

ஆணுக்கழகு யீனமின்றிக்காப்லைத் தலங்கரித்தல்
தோணுக்கழகு கற்பன்னிரெண்டுமுழந் தப்பட்டியாம்
வாணுக்கழகு கூறின்றியேயர்கும் வளர்புயலைத்
நாணுக்கழகு ஷோசியிலே வாங்கித் தருப்பதுவே

ஆ-வம் என்று மேல்படி கவியையும் பாடிமுடித்துவிட்டுஜயா
ளசைக்கொடுத்துப் பொடியையவாங்கி மடியில்வைத்துக்கொண்டே
இருந்தால், அதற்குமதிப்பு கிடையாது, எப்போதாவதும், அந்த
கினைவுவந்ததோ, அல்லது தடிமம் பிடித்துக்கொண்டோ, இருக்குஞ்
சமயத்தில், யாரிடத்திலாவது, ஒருசிமிட்டி ஊசிப்பொடியைவாங்கி
போட்டால் காரமுந்தெரியும் தடிமமும் விட்டுப்போகும் மண்
டைக் குத்தானபோதிலும் மாறிவிடும். சரீரமும் சுன்றுப்பாமெ
ன்றும் இதற்குப்பேர் பிர்ம்மப்பத்திரமென்றுங்கூறினேன். அது
கேட்டு உடனேயவர் ஐயா! தாங்கள் யேதாவது ஞானசாஸ்திரங்
களும் பார்த்திருக்கக்கூடுமோவென்றார், அதற்குயான் ஆம்பார்த்
திருக்கிறேன், என்னத்திற்காக கேட்டீர்களென்று வினவினேன்
அதற்கவர், இல்லே எதாவது தெரிந்திருந்தால் இந்தப்பாமூங்காதா
லே கொஞ்சங்கேட்கலாம் என்றுநான் கேட்டேனென்றார் அதற்கு
யான் கேளுங்கள் தெரிவிக்கின்றேனென்று, அவ்விடத்தில் ஓர்
பிரசங்கஞ் செய்தேன் அதாவது

சரீரத்திற்கு மருந்து

வைத்தியத்திற்கு, கியித்தியம்

பாடுகின்ற தொண்டையது கட்டிக்கொண்டால்
பஞ்சமுடனோர் மருந்தைப் பகரக்கேளு
காடிபுளுக்கினித் திராகந்தன்னில்
கல்மாகவனைபாட்டிலேச் சாப்பிட்டால்

கூடும்பின் சரீரம் யேகமதாக
கூட்டமது கூடிமுன் பாட்டைக்கேட்க
ஆடுமயில் வேலவர்க்கு அகஸ்தியர்முன்னே
அறைந்த விதயிதுவாகும் மறிந்துபாரே

வ-ம் இதாவது, தினைபீபுனத்து வள்ளியிடம், வடிவேலர்முன்பு தர்க்கஞ்செய்து, வாதாடினமையால், சரீரம் கட்டிக்கொண்டு அகஸ்த்தியரிடம்போய், தொண்டைகட்டிற்குமருந்துகேழ்க்க அகஸ்தியர், சுப்பிரமண்யர்க்கு உபதேசித்த முறையானபடியால் இதைத் தடையின்றிசெய்யலாம்

### இஃது. வியித்தியம், வயத்துவலிக்குமருந்து

வயித்திறினை வலித்ததாகில் வாணவெட்டியார்சொன்ன
கயிற்றினைச்சுருக்குப்போட்டுக் கழுத்தினில் மாட்டிக்கொண்டு
பயத்தினை விட்டோர்கிளையில் பக்குவமாகக்கட்டி
தயத்துடன் ஊஞ்சலாட காணேயிக்கிருந்திடாதே

ஐயா! இஃது ஞானவெட்டியார்தம்பி, வாணவெட்டியார்சொன்ன, அருமுறையானபடியால், இதனையொருமுறை மனவூக்கத்தோடு ஒரேமனதாகவுஞ்செய்து பரிசைக்ஷபார்த்தால், அதன்பின் கணவான்களுக்கு, இதன் மகிமை சரில்விளங்கும், அன்றியும உலகில், வழிற்றுவலியால் வருந்தினவர்களெல்லாம், இம்முறையால்தான் மாண்டார்களென்று கண்டுமதிக்கவும்.

### வியித்தியம், காதுகேட்கமருந்து

காதுதான்கேட்க வீயக்கட்டிவைபக் காய்ச்சிக்காதில்
ஊதகவெண்ணிடாது சுடச்சுட ஊற்றுமென்று
மாதுமையாள்பயின்ற மயிலவன் மலைமுனிக்கி
ஓதியமுறையிதாகும் வுடனிதைச்செய்துபாரே

வ-ம் ஐயா! இந்தமுறையானது, அகஸ்தியர் செடுகாளாகவனத்திலும் மலையிலுமே உட்கார்ந்துத் தவஞ்செய்துகொண்டு இருந்தமையாலும், அங்கு வீசப்பெருங்காற்றுகளாலே, கல்லும் மண்ணும் கலந்து காதில் புகுந்தடைத்துக்கொண்டபடியால், காதுகேளாது அகஸ்த்தியர்வோடி, சுப்பிரமண்யனைக்கேட்க சுப்பிரமண்ணியர் அகஸ்தியருக் கருளிய முறையாகையினால் அவசியமிதனை ஒருதடவைசெய்து பார்ப்பவர்க்கு கைகண்டபலனுக்கும் மறந்துவிடாதீர்

## நித்திரைவராதிருக்க வியத்தியம்

உறக்கத்தைநீக்குதற்கு வுண்டொருமருந்தைக்கேளு
இரக்கமதாகக்கொம்பர் வேட்டினில்லெழுதிடாத
சாக்கிலாகக்கொண்டுவந்து சாப்பிடாதிருப்பாயாகில்
இருக்கிறவுறக்கம்போக இனியில்லைவேறுதானே

வ-ம் ஐயா! இந்தமுறையானது கம்பர்தம்பி, கொம்பர்சிறப்பசரித்திரத்திலே 2013-வது ஏட்டிலேயெழுதியுள்ளார். இந்தமுறையைத் தவிரவிடாது கைபாகஞ்செய்பாகத்தோடும், அதிகபயபக்தியோடுஞ் செய்து பார்த்தால், இதன் உண்மை நேரில் தானேவிளங்கும்

## வியத்தியம் தான்சாகமருந்து

தேன்சாயும்வாழ்க்கையிலிருந்துகொண்டேதினம்சிந்தைநொந்
தான்சாகசர்வெனக்கின்னும் வரவில்லையென்றேங்கினோர்[அ
தான்சாகவோர் முழக்காலமுமாக் குடாகத்தில் வீழ்ந்தால்
என்சாவுறுமென் றகஸ்தியர் வெளிக்கியம்பினரே

ஐயா! இந்தமுறையானது சாக்ஷாத் ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் மாணாக்கரிக்காக மலைவளைவந்து கிடைக்காததினால் வெட்கமுற்று தன்பிராணனை விட்டுவிடவேண்டுமெனக்கருதி அகஸ்தியரிடம் போய் ஏன்சாகமருந்தொன்றுகேட்க, அகஸ்தியர் உபதேசித்தது இந்தமுறையானதால் உடனேசெய்துபார்க்கில் கண்கண்டபலனுறும் இதற்கு சந்தேகமில்லை.

ஐயா! ஓர் கிராமத்தில், வேதக்காரர்களெல்லா மொன்றுகூடி தமிழ் தெய்வத்தைப்பழிக்கவேண்டுமெனக் கருதி, வோர்பெரிய படத்தில், ஓர்பக்கத்தில் தங்கள் கடவுளாகிய, இயேசுகிறிஸ்துவை இரண்டுகால்களையும் மண்டியிட்ட பாவனையாகவும் இரண்டு கைகளையும் ஏந்தி வரங்கேட்ட பாவனையாகவும், மயிர்களெல்லாம் விரித்தவண்ணமாயும், எழுதிமற்ற வொருபக்கத்தில், கமலமிருந்தமூர்த்தியை கீர்வாணமாகவும், ஒருகையை சின்முத்திரையைத்தாங்கொண்டு மற்றொருகையால், வெண்ணெயுண்ட பாவனையாயும் பாலப்பிராயமாயும், நின்றவண்ணமாயும், அப்படத்தின் மற்றவொரு பக்கத்தில் உருவத்தைவரைந்து, அவ்வூரின்நடுவழியில் வைத்திருக்க அச்சமையம், அவ்வழியாக விக்னராயமக்ஷிக்கதைப்பொருந்திய ஒருவன், அக்குலக்குநின்று பார்த்து நகைக்க, அதற்கு அங்கிருந்த

ஒருவர் ஓடிவந்து என்ன பார்த்து நகைக்கின்றீர்களே எனக்கேட்க அதற்கு விஷ்ணுவம்சத்தனடையவன் சொல்லுகிறான், இல்லை, இந்த படத்தை வரைந்தவர் யாரோ, அவரை நினைத்து நகைக்கிறேனென்றான் அதற்கவன், பார்த்தீரா, இப்படியுங்கள் சுவாமி திருடி வந்து தின்று நின்றதையும் சரியாய்த் தின்னாமல் ஒரு கையை கனத்தில் வைத்துக்கொண்டு, ஒருகையால் வெண்ணெயைத் தின்னுகிறாரே இவரும் ஒருசுவாமியாகுமா! நீங்களிவரைத் தெய்வமெனக்கொண்டாடலாமா? இதோ எங்கள் சுவாமியைப் பாருங்கள், நம்மைக்காப்பாற்றும் பொருட்டு கடவுளிடத்தில், மண்டாடி மண்டியிட்டு வரங்கேட்கிறார் இவரல்லவோ தெய்வம் அவர் தெய்வமாகுமா? எனகேலி செய்யத் தொடங்கினார் அதைக் கேட்டவுடனே விஷ்ணு வம்சம் பொருந்தியவன் சொல்கிறான்,

கட்டளைக்கலித்துறை

மஞ்சலதாடுகின்ற வுரிவெண்ணெய் தன்னைத்திருடி
அஞ்சியோர்மூலையிற்சென்று அவசரித்துண்ணும்போது
கெஞ்சியேயுங்கள்சுவாமி கேட்டிருகையுமேந்தக்
குஞ்சியைத்தாரேனென்றுக் கோபித்துகாட்டுகிறாரே

வ-ம் அதாவது யெங்கள்சுவாமியானவர் வயிற்றுக்கில்லாதபடி அங்குமிங்கும்ஓடி திருடிக்கொண்டுவந்து, ஆருக்குந்தெரியாதபடி ஓர் மூலையிலிருந்து வெண்ணெயைத் தின்று கொண்டிருக்க அதையெப்படியோ உங்கள்சுவாமியானவர்பார்த்து அவரருகிற்சென்று எனக்குகொஞ்சந்தாவென்று பல்லைக்காட்டிகெஞ்சி ஆத்திரத்தோடு, மயிர்களையெல்லாம் விரித்துக்கொண்டு, மண்டிக்காலிட்டுக்கொண்டும், இருகைகளையு மேந்திக்கேட்கிறார், அதற்குஎங்கள் சுவாமி போடாபோடாப பித்தியக்காரா! உனக்குவெண்ணெய் கிடையாது இதுதான் கிடைக்கும் என்றுகிசனத்தைப் பிடித்துக்காண்பித்திருமென்று சொல்ல அதைக்கேட்டவன் வெட்கமுற்று முகஞ்செத்து பதில்பேசமுடியாமல் வெளியிலிருந்தஅப்படத்தை உள்ளேகொண்டுபோய் ஒளித்துவிட்டானாம், இதாவது, தன்தெய்வம்பெரிதெனபிறிதெய்வஞ்சிறியதுவென்று பெருமைபாராட்டக்கூடாதென்பதேயாம் இதன்கருத்து

## மெஞ்ஞானத்தங்கத்திற்கு அஞ்ஞானத்தங்கம்.

ஊரையே மாற்றவேணும் உடலினைத்தேத்தவேணும்
பேரையும் மாற்றவேணும் ஏநெஞ்சமே
　　பெண்புத்திகேட்கவேணும்

பெண்புத்தி கேட்கவேணும் பின்பற்றிபோகவேணும்
உண்மையைப் போக்கவேணும் ஏநெஞ்சமே
　　ஊர்வாயில் நிற்கவேணும்

ஊர்வாயில் நிற்கவேணும் உத்தியோகம் பார்க்கவேணும்
கார்பாரு செய்யவேணும் ஏநெஞ்சமே
　　காசுக்காரனாகவேணும்

காசுக்காரனாகவேணும் காடுகரைவாங்கவேணும்
ஆசுக்கார மாக்கவேணும் ஏநெஞ்சமே
　　அடிபிடிக் கேகவேணும்

அடிபிடிக் கேகவேணும் அதிகாசை கொள்ளவேணும்
குடியைப்பழகவேணும் ஏநெஞ்சமே
　　கோவிலை மறக்கவேணும்

கோவிலை மறக்கவேணும் குடும்பம் பெருக்கவேணும்
பாவமேதென் றெண்ணவேணும் ஏநெஞ்சமே
　　பாத்தையரைச் சேரவேணும்

பாத்தையரைச் சேரவேணும் பஞ்சணையிற்றூங்கவேணும்
கரத்தைப் பிடிக்கவேணும் ஏநெஞ்சமே
　　காரில் வுலாத்தவேணும்

காரிலுலாத்தவேணும் கெவுருவங்கொள்ளவேணும்
பாரில் சிரிக்கவேணும் ஏநெஞ்சமே
　　பட்டுகளைக் கட்டவேணும்

பட்டுகளைக்கட்டவேணும் பணிகளைப்பூணவேணும்
பொட்டுகளை வைக்கவேணும் ஏநெஞ்சமே
　　பொல்லாங்கு செய்யவேணும்

பொல்லாங்குசெய்யவேணும் பொய்சத்தியம்பண்ணவேணும்
நல்லா யிருக்கவேணும் ஏநெஞ்சமே
　　நாட்டார் மதிக்கவேணும்

நாட்டார்மதிக்கவேணும் நாள்வட்டிப்போடவேணும்
நட்டணி வாங்கவேணும் ஏநெஞ்சமே
　　இன்குமிட்டாஸ் பேறவேணும்

இங்கம்பிட்டாஸ்யேறவேணும் ஏகமதிப்பாகவேணும்
சங்கையின்றி வாழவேணும் ஏநெஞ்சமே
டைக்காட்டு வைக்கவேணும்

டைக்காட்டுவைக்கவேணும்டம்பஞ்செலுத்தவேணும்
வைபக்காட்டு பிரதர்சனை ஏநெஞ்சமே
பழகித்திரியவேணும்

வ-ம் ஐயா! உலகில் ஜென்மமென வுருவெடுத்துவெளியில்வந்திட்டால் சிற்றின்பபோகமே நமக்குத்தெய்வமென்று நினைத்தல் வேண்டும், அதைவிட உருசியாகியபதார்த்தவைகள் உலகிலகிடைக்கவே கிடைக்காது, அதுவேநமக்கு, பரமோக்ஷத்தையளிக்கக்கூடிய வீடு, அன்றியு மினியொன்று நமக்கு முன்னோர்கள்தேடிவைத்த

புலிவிருத்தத்திற்கு கிலிவிருத்தம்

காசினை யள்ளி வீசிக்கணக்கிலா
தாசிமார்களைச் சார்ந்திருக்காதுபின்
கூசிக்கூசிக் குவலயமீதினில்
பேசிப்பேசிப் பெருமையென்பேசுவீர்

வட்டிமூன்வட்டி வைத்துமனைகளைக்
கட்டிதாசிகளுக் களித்தேபிராந்திப்
புட்டிபுட்டியாய்ப் போதையுறச்தலை
தட்டிசாப்பிடா ஜென்மமோர்ஜென்மமே

தொல்லுலகோர் நகைத்திடுந்தாசியின்
சொல்லுசட்கிரங்கிச் சுகித்தேபின்பு
நல்லநல்லநகை செய்திடார்மனைக்
கல்லதாமெனக் கண்டுகொள்வீரே

ஐயா! ஒருவூரில், ஒருபுருஷன்பெண்சாதியுமிருந்தார்கள் அதில்புருஷனானவன், ஏ பெண்ணேநானொன்று தெரிவிக்க எண்ணியிருக்கிறேன், அதைத்தெரிவிக்கட்டுமாவெனக்கேட்க அதற்கு பெண்ஜாதி நாதா தாங்கள்நினைத்ததை என்னிடஞ் சொல்லாது, பிறருயாரிடத்தில் தெரிவிக்கப்போகுறீர்கள், சும்மாமனதில்ஒன்றும்நினையாது என்னிடஞ்சொல்லுங்களென்று வற்புறுத்திக்கேட்க, அதற்கவன் ஏ பெண்ணேநமது அடுத்தவீட்டு சுந்தரம்மாள் இக்குபோக்கு வாத்தாக இருக்கிறபடியால், அவளை எப்படியாவது நீயெனக்கு சேர்த்துவைக்கவேணும் இல்லாவிடில், எனதுபிராணன் நில்லாது

என்று மிகவுங்கெஞ்சிக்கேட்க, அதற்கவள் சற்றுநேரம் யோசித்தவளாகி, அதன்பிறகு அவள் நாதா, அதைத்தாங்கள் கருதக்கூடாது அது பெரியபாதகமென்று [illegible] எடுத்துச்சொல்லியுங்கேளாதபடியினால், [illegible] அதன்பிறகு, நாதா அப்படியே ஆகட்டும் அந்தப்பெண்ணையெப்படியாவது தங்களுக்குச்சரிப்படுத்திவிடுகிறேன் எனக்குத் தாங்களொரு காரியம்முடித்துவைக்கவேணும் இல்லாவிட்டால், என்னுசரீரத்தையே கண்ணில்பார்த்துக்கொள்ளமுடியாதென்று மிகவுங்கெஞ்சிக்கேட்க, அதற்கவன் என்னபெண்ணேயது என்னிடத்தில் தைரியமாகச்சொல் நான் முடித்துவைக்கிறேனென்ன அதுகேட்டவுடனவள், பிராணபதி வேறொன்றுமில்லை, தங்களோடுவருகிறாரே அந்தநாகய்யர் அவரையெப்படியாவது என்னிடத்தில் சேர்த்துவைத்தால், நான் அவளையெப்படியாவது, தங்களுக்குச்சேர்த்துவைக்கிறேன் என்றாள். உடனேயவர்பார்த்து, கோபித்து கையையோங்கிக்கொண்டு அருகில்போய் நான்தான்சொன்னால் நீயிப்படிச்செய்கிறாயென்று பல்லை நறநறவென்றுகடித்து [illegible] அதுகண்டு உடனே அவள் அருகில்வந்து காலில்விழுந்து நீங்கள் இப்படிக்கோபப்பட் தங்களுக்குக் கூடாது, இதுபோலதானே, [illegible]மான்புருஷனுக்கும்வரும், ஆதலால் தாங்கள், இனிஇப்படியாகியெண்ணத்தைக் கொள்ளக்கூடாது என்று அநேகநீதிமதிகளைச்சொல்ல, அதுகேட்டவனுக்கு நல்லமதியேற்பட்டு பெண்ணே நான் முன் உன்னிடத்தில் சொன்னவைகளெல்லாம், மிகுந்ததப்பிதம் நான்செய்தது பெரியபிசகு, ஆதலால் நீயெனது பிசகுகளையெல்லாம் மன்னித்து பொறுத்தருள்வாயாகவென்று வேண்டினனாம். அதாவது தனதுடையமனைவியைவிடுத்து அன்னியமாதரை நினைத்தல் கூடாதென்பதற்கு இது அத்தாக்ஷியேயாம்.

## உலகநீதிக்கு, விலகநீதி

### காப்பு

புத்தியற்ற மூட்டுக்கும் புருஷாண்டிக்கும்
போக்கிரிக்கும் போசம்பெற்ற புலவோர்க்கும்

சத்தியத்தைநிலைநிறுத்தி வாழாதார்க்கும்
சாப்பாட்டுராமனுக்கும் தடிமுண்டைக்கும்
பத்திரமாய்ப் பணஞ்சேர்த்து மீயாதார்க்கும்
பணந்தேடி யுண்ணுமற் சாவோருக்கும்
குத்திகொலை செய்பவர்க்கும் கள்வோருக்கும்
கோர்ட்டாரா விருகைக்குங் காப்புதானே.

பொய்சொல்லா தொருநாளு மிருக்கவேண்டாம்
புத்தியுள்ள பேர்களுடன் கூடவேண்டாம்
மெய்சொல்வோர்களை யென்றும்மதிக்கவேண்டாம்
மேன்மையென்ற ஞானமதைப் படிக்கவேண்டாம்
தெய்வமொன்று வுண்டெனவே நினைக்கவேண்டாம்
தேவடியாள் வீடதனை மறக்கவேண்டாம்
செய்கையினை யிதுபோலே செய்வார்தங்கள்
சீரடியைப் போற்றிதுதி செய்வாய்நெஞ்சே.

தாய்தந்தைக் கிளக்காரங் கொடுக்கவேண்டாம்
தாரத்தை மனம்வெறுக்கச் செய்யவேண்டாம்
வாய்பேசா தடக்கமதாய் இருக்கவேண்டாம்
வம்புச்சண்டை செய்யாமல் வாழவேண்டாம்
சேய்களிடம் வுதைவாங்கா திருக்கவேண்டாம்
தினம்படித்தசாலே ஸ்த்திரமாகவேண்டாம்
பேய்பிடித்த முலகினிலே பேசவோரைப்
பெரியோரென்றே துதித்துப் பேணாய்நெஞ்சே.

நல்லதென்று தர்மமதைச் செய்யவேண்டாம்
நாணயத்தை யொருநாளுங் கொள்ளவேண்டாம்
அல்லலதைக் கூடாதென் றெண்ணவேண்டாம்
அஞ்ஞானமார்க்கமதை யகற்றவேண்டாம்
இல்லறையைப் பவுனாக்கா திருக்கவேண்டாம்
திருடிஜெயில் சேருவதை மறக்கவேண்டாம்
கல்லாதமாக்களுடன் களித்துபேசுங்
கசடர்களின் காலடியைப் போற்றாய்நெஞ்சே.

அக்நிசக்திக் குடிகுடியா திருக்கவேண்டாம்
ஆருக்குமடங்கி பதில்சொல்ல வேண்டாம்

உக்திக்கி புருஷியதா யுண்ணவேண்டாம்
உள்ளத்தின் வஞ்சனையை யகற்றவேண்டாம்
பந்திக்கு முந்தாமல் படுக்கவேண்டாம்
பரதேசிகட்கன்னம் படைக்கவேண்டாம்
முந்திமுந்திபேசுதற்கு முன்னேநிற்கும்
மூர்க்கர்தமைப் போற்றுதற்கு முயலாய்நெஞ்சே

போனகொலை செய்யா திருக்கவேண்டாம்
பெரியோர்க்கு மரியாதை வைக்கவேண்டாம்
ஊரார்கள்வாழமனம் பொருக்க வேண்டாம்
ஊருடமை தின்றும துலாவவேண்டாம்
மாறாகப் பேசுவதை மறக்கவேண்டாம்
மாசுதிமையாம் ஆதைக்கை விடவேவேண்டாம்
சாராயப்போதைதனைத் தவிர்க்காநின்ற
தனவான்கள் பாதமதைத் தழுவாய்நெஞ்சே.

ஐயா! ஒருநாள் ஒருவீட்டில் நான்கு சிநேகிதர்கள்ஒன்றாகூடி, ஏதோ சில விஷயங்களைப் பேசிமுடித்துக் கொண்டு எழுந்தார்கள் அதற்குள், ஒருவன், வாருங்கள்காப்பிகிளப்பிற்குப்போவோமென்றான் அதற்குமற்றவன், எந்தக்காப்பிகிளப்பிற்குப் போகலாமென்றான். அதற்குமுன்கூறியவன், இதோசமது பக்கத்தில் உள்ள சாந்தி விலாசத்திற்குப்போவோமென்றான் அதற்கு மற்றவன், சீச்சீயங்கு வேண்டாம் அங்கு சாப்பிட்டால், சாப்பிட்டவுடன் எழுந்து, இலையைக் கொண்டுவந்து, வெளியேதொட்டியில் போடவேணும், அது பெரியசிரமம், ஆதலால் பாம்பைவிலாசத்திற்குப் போவோமென்றான் அதைக்கேட்டு மற்றவன் போடா போடா பயித்தியக்கார அங்குபோனாலுமப்படிதானே இருக்குமென்றான் அதற்கு முன்கூறியவன் இல்லை இல்லை அங்குசாப்பிட்டால் சாப்பிட்டவுடன்பெஞ்சிக்குக்கீழேயே இலையைப்போட்டுவிட்டுக் கையை அலம்பிக்கொள்ளலாமென்றான் அதற்கு மற்றவன், உனக்குக்கூட புத்தி கிடையாது அதைவிடமகாராஜாவோட்டலிற்குப்போனால்கையால்கூடயெடுத்து சாப்பிடவேண்டியதில்லை, அவர்களேகொண்டுவந்து வாயில்வைத்து விடுவார்கள், ஆதலால் அதுரொம்பசௌரியம் அங்குபோவோமென்றான், அதைக்கேட்டுமற்றவன், அடே! நீங்கள்மூன்றுபேர்சொல்லியது

ஹைப்பில், எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை அடா பேரனொன்று நீங்கள் சொல்லியபடி மகாராஜா வேட்டைக்குப் போனு ஜப்கூட, அவர்கள் வாயில் வைத்தவுடன், மென்றுதான் தின்று முழுங்கவேணும், அதைவிட பீமவிலாசத்திற்குப் போனல். அங் கேஇவ்வளவுசிரமமில்லை கடிக்கவேணுமென்பதுகூட அவர்களே தின்றுவிடுகிறதுவிட்டு வரும்போது ஆள் 1-க்கு அணு 8-க்கு பில்கட் டிக்கொடுப்பார்கள் வாங்கிக்கொண்டுவந்துவிடலாம் ஆகலால் அது தான்சவுரியம். அங்குவாருங்கள் போவோமென்றான். அதற்குமுதல் முதல் சொல்லியவன் பார்த்தா போடா போடா வாய்காசுகொடுக்க அவர்கள்சாப்பிடுகிறதுகூட அதுமில்லாமல் கடையிலே பில்கட்டு வேறேசமைக்கவேணும் அப்படி பில்கட்டுவையமென்றாலும், நம் முடையவீட்டிலென்னமோ இருக்கின்றதா? அதுவுமில்லை, ஆக லால்காப்பியும்பிப்பியும்வேண்டாம் எம்பேர் அப்போவே, அவரவர் வீட்டிற்குப்போய் பழையதை சாப்பிடுவோம் வாருங்களென்றுப் பேசிக்கொண்டு அவரவர்வீட்டிற்குப்போய் சேர்ந்தார்களாம். இதா வதுசோம்பேரிக்குத் தோலோடுவாழைப்பழமென்பதேயாம்.

| | |
|---|---|
| கற்றோர்க்கழகு | பெற்றோர்ப்பகையாம் |
| பெற்றோர்க்கழகு | பிள்ளையைநீக்கல் |
| பிள்ளைக்கழகு | கொள்ளைபுரிதல் |
| கொள்ளைக்கழகு | கூடிட்டதேசம் |
| கூடிக்கழகு | ஜோடியாய்த்திரிதல் |
| ஜோடிக்கழகு | சூதுகளாடல் |
| சூதுக்கழகு | வாதுபுரிதல் |
| வாதுக்கழகு | வம்புவளர்த்தல் |
| வம்புக்கழகு | சண்டையெடுத்தல் |
| தம்புக்கழகு | சண்டைபுரிதல் |
| சண்டைக்கழகு | மண்டையுடைத்தல் |
| மண்டைக்கழகு | இரத்தம்வடிதல் |
| இரத்தத்திற்கழகு | செத்துக்கிடத்தல் |
| செத்ததிற்கழகு | செலவுகள்கோணல் |
| செலவுக்கழகு | விளிந்திடல் |

| | |
|---|---|
| புன்றைக்கழகு | பிடித்துக்கொடுத்தல் |
| பிடித்தற்கழகு | அடித்துப்பின்கட்டல் |
| அடித்ததற்கழகு | அடைப்பித்தல்சிறையில் |
| அடைப்பதற்கழகு | இடைத்தவர்விட்டு |
| இடைத்ததற்கழகு | கோர்ட்டிலேற்றல் |
| கோர்ட்டிற்கழகு | பாரிஸ்டர்பேசுதல் |
| பாரிஸ்டர்க்கழகு | பணமொழுக்கியம் |
| பணத்திற்கழகு | சனத்தின்வாய்தா |
| சனத்திற்கழகு | சாக்ஷியைக்கேட்டல் |
| சாக்ஷிக்கழகு | சூக்ஷியம்பேசல் |
| சூக்ஷிக்கழகு | தோரணையாகும் |
| தோரணைக்கழகு | விசாரணைசெய்தல் |
| விசாரணைக்கழகு | விலங்கைப்போடல் |
| விலங்கிற்கழகு | கலங்கச்செய்தல் |
| கலங்குதற்கழகு | கனிதின் முழலல் |
| கனிவிற்கழகு | தெளிவைத்தருதல் |
| தெளிவிற்கழகு | தேகம்பெருத்தல் |
| தேகத்திற்கழகு | போகத்தைச்செய்தல் |
| போகத்திற்கழகு | புண்ணையாப்பு |
| புண்ணிற்கழகு | மண்ணிலிறத்தல் |
| மண்ணிற்கழகு | எருவும்இறகும் |
| எருவிற்கழகு | பெரியுதலாகும் |
| பெரியுதற்கழகு | யோகவெளிச்சம் |
| வெளிச்சத்திற்கழகு | விண்புவியாமே |

வ-ம் ஐயா! நாம் எக்காரியத்தை செய்வதற்கும், இடங்கொடுக்கக்கூடிய நற்புணர்வொன்றே, இப்புணர்வொன்றில்லா விடில் எக்காரியமும் நடைபெறுதென்பது திண்ணம், ஆதலால் நாம் இந்த ஜகத்தில் முக்கியமாகவும், முதன்மையாகவும், விளங்கக்கூடியது வஸ்து இன்பமே, அதையே நாம் கருதி அனுபவிக்கவேண்டும் என்பது எனது கருத்து.

## இராமாயணத்திற்கு கீமாயணம்

ஜெனகன்பிறந்திடாவிடி லந்தசீதைதான்
ஸ்ரீராமன் மனைவியாமா

செப்பரியபொன்மானின் பின்சென் றுசொல்லா
திருக்கிலவ னுயிர்மாயுமா

வனமதிற்சானகி தனித்திராவிடில் சிறை
வர்தெடுத்திட முடியுமா

வல்லவஜெடாயு சொல்லாவிடில் கடந்திட்ட
வகைமுழுதந் தெரியவருமா

இணைகாணெனும் அனுமா னிலாவிடிலந்த
தென்னிலங்கை யழியுமா

சிருயதிருச்சடைமுன் தேருதல் சொலாவிடில்
சீதையின் மனமாறுமா

கனகமுடிபத்துள்ள ராவணனிலாவிடில்
ஸ்ரீராமன் கொல்லவருமா

காரணந்தெரி யாமலிவ் வொருகதையெனக்
கழறுவதும் மதியாகுமோ

### துன்மார்க்கஞ்செய்யலாமென்பதற் கத்தாக்ஷியிது.

### ஆசிரிய விருத்தம்.

சூதாடியையவரை ஜெயித்தா லல்லவோ
துரியோதனன் சிறந்தான்

துர்ச்சாதனன் வீரனானதா லல்லவோ
துரோபதையைத் துயிலுரிந்தான்

வாதாடிமோகத்தைக் கொண்டதா லல்லவோ
வள்ளியைகுகன் மணந்தான்

வம்பனென்றோர் பெயரைப்பெற்றதா லல்லவோ
வாலிமோக்ஷ மடைந்தான்

நிதானகொலைசெய்ததா லல்லவோ முன்னஞ்
சிறுத்தொண்டன் கைலைசென்றான்

திருட்டுத்தொழில்தனைச் செய்தல்லவோ கன்னன்
தேகந்தனை வளர்த்தான்

வேதாகமத்திற் சிறந்தா லல்லவோ
வேதன்முன்சிறை யிருந்தான்

விபரங்களிப்படி யிருப்பதால் சாமினி
வீட்டைகவ னிக்கவேண்டும்,

தாயுமானவர் பாடல்.

அங்கிங்கெனாதபடி யெங்குமோ சடிசெய்து
அதிகப்பணக் காரனாகி

அருளொளவுந் தாசிகளையிருபுற மமர்த்திவெகு
ஆடம்பரஞ் செய்துப்புகழ்

தங்கும்படிக் கிடப்ளாக மோட்டாக்காரு
சைக்கிலொடு சிவிகைபலவும்

தட்டாருவைத்து நன்மாடமாளி கைசுற்றி
தக்கபார வமைத்து

எங்குந்திருந்தி யூரெலாம் பேராகி
யெவர்க்கரும் கைக்கட்டிட-

யாதினும்வல்ல பெருடம்பஞ் செலுத்தியே
யெறுக்கு மாறுபேசி

கன்குல்மாறுமனும் நித்திரைவராமனும்
கனவினும் வாதாடியே

கண்டெனவெலாம் வாங்கவேணு மென்றேதினங்
கருதிபோராசை கொள்வசம்

பட்டினத்தார் பாடல்

வீடுமக்கு அளவற்றதுண்டு வேசையர்களால்
ஓடுமக்குண்டு சிற்றின்பபாத்திரம் வுறுதியதாய்
காடுமக்குண்டு கேட்டதோர்புண்களை கம்பித்தா
நடுமக்குச் சரியானபேரின் கெதிரில்லையே

கன்றுண்டுகோண கருத்துண்டுசேர்க்கக் கன்னியரிடமே
பண்ணுண்டுபாட கற்பஞ்சணைபுமுண்டு படுத்துறங்கி
புண்ணுண்டுவாச்சப் பொருளுண்டுதேற்ற புலவர்வைத்
காணுமுண் டால்புத்திரி லைவத்தியசாலை யெதிராகவே

## சிவவாக்கியருக்கு அவ்வாக்கியம்

காணவேணு மென்றுநாம காவியில் மெழுக்கதும்
ஆணவத்தை மனதிலெகொண்டு நாடவைத்த ஆசையை
வேணுமென்று நீக்கியீசன் மெய்யினை விலக்கினால்
காணலாகும் கண்டபின் சென்னிதன்னில் சேர்ந்திடும்

## செல்வத்தைப் பேணுதல்

ஓடியோடி யோடிநன்று புள்ளிவைச்ச வேளுத்துமே
தேடித்தேடி யிரணியத்தை தின்றிடாது சேர்த்துமே
வாடிடாது பெட்டியிற்குள் வைத்திருந்து பார்த்திடில்
சோறுசெய்த யாகச்செல்வம் கும்மென்று காணுமே

## மதிப்பைச்சேருதல்

கார்தபாலில் சினியிட்டுக் காய்ச்சி மூன்றுவேளையும்
குடச்சூடத் தூத்தியூட்டி நாள்கூடச்சூட வருந்திடில்
வுதிர்த்திடா திருப்பமென்று ஆக்கமாய்ப் பெருத்துமே
இறந்தபோகும் போதவர்கள் வெவளுயும் மதியார்களே

## ஈசனுண்டாகும் வகை

ஓசைபெற்ற மிருதங்கம் பூரிஸ்மாரி பெய்ததின்
வாசலெங்கும் தவாரமாகி வண்கதிரோன் காய்ந்திட
பூசைபண்ணி கோவிலுக்குப் போகும் சித்தகைபோல்
வீசல்க ளதிலிருந்து வேகமா யுண்டாகுமே

## கிட்டாராஜபத்து

காவாமுன் மாமிதனைப் பூசிக்கவிட்டேனோ
கன்னியர்கள் ஊரவற்றவனோ
கடனென்று பொருள்பறித்துத் தந்திட்டேனோ
கிளைவழியில் முள்ளிட்டேனோ
தாயருடன் பிறவிக் கேளினைசெய் திட்டேனோமுன்
தந்தைதிவேண்டா மென்றேனோ
நானென்று செய்பிரதானமிவி ருந்தேனோ
தப்பிகளை பூசித்தேனோ

வாசாதப் பொருளிடமாமனு விருக்கவே
வானவரைப் பணிந்திட்டனே
பஞ்சமற்றுப் பிறிவைச்சேர்த்தில் இருந்தனே
வம்பினை மறந்திட்டனே
சயாதலோபியா யிருப்பதை விட்டனே
எல்லாம் மறந்தருளுவாய்
ஏகமே இன்ப ரசமோகமே யித்தரையில்
எங்கும் புகழ்த் தேகமே

118121

---

ஐயா! ஓர் சிறிய கிராமத்தில், ஒருநாள் இரவில், அதிக மழை பெய்து, அவ்வூர் கண்மாய் நிறைந்து, ஊர் காடெல்லாம் வெள்ளம் பெருகிவரக் கண்டு, அவ்வூரில் உள்ளவர்களெல்லாம், ஒன்றுகூடி அவ்வூர் நாட்டாண்மை கிராமமுன்சீப் கணக்கப்பிள்ளை இவர்களிடத்தில் போய், ஐயோ முறையோவென்று கூச்சலிட, அவர்கள் அவ்வூர்க் குடிமகனை யழைத்து, இன்றைக்கு ஒருவரும் காடுகளைக்குப் போகக்கூடாதென்று பறை சாற்றி வா, உத்தரவளித்தார் அதைக் கண்டு அவன் பறை சாற்றி விட்டுவர, அவ்வூரிலுள்ள யாபேர்களும் வேலைக்குப் போகாது அவ்வூர் பொது மடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அதுசமயம் கிராமமுன்சீப் நாட்டாண்மைக்காரர் கணக்கப்பிள்ளை இவர்கள், குடிமகனை யழைத்து, அடே! நீ சீக்கிரம் போய் நமது கண்மாயில் ஜலம் எப்படியென்றும், எந்தப்புறத்தில் உடைத்துக்கொண்டதென்றும், பார்த்து ஓடிவாவென்றனுப்ப உடனே குடிமகன், நேரே, வீட்டிற்குச்சென்றுப் பழையது சாப்பிட்டு விட்டு, தன் சாவகாசம்போல் மெதுவாகப்போய், கண்மாயைப்பார்த்துவிட்டுவர அதற்குள் அவ்வூர்க் குடிஜனங்கள், போனவனை இன்னுங் காண வில்லையே, அங்கு எப்படியோ, ஏதோவென்று மனம்பதறி திடுக்கிட்டு, ஆளுக்கொரு மண்வெட்டியும் கடப்பாரையும் வைத்துக்கொண்டு குடிமகனை யெதிர்ப் பார்த்துக் கொண்டிருக்க, அச்சமையம், குடிமகன் வந்து நின்றான் அதைகண்டு கிராமமுன்சீப் என்னடா போன சமாச்சார மென்றுகேட்க, அதற்கவன் சொல் முறை, சாமி யானிங்கிருந்து போய்ப் பார்த்தேன்

5

பார்த்ததில் அவ்விடத்தில், மழை பெய்கிறது, பக்ஷிகள் தவ்வித் தவ்விக் குதிக்கிறது, கொக்குகள் அதைக் கொத்திக் கொத்திப்போகிறது என்றான் அதைக்கேட் டவர்கள் அதிக கோபங் கொண்டு வாயிலைப் பார்த்து வந்து சீக்கிரஞ் சொல்லடா வென்றனுப்ப இவன் சென்று சாவகாசமாக வந்தது மன்னியில், இலக்கணமாக வல்ல பேசுகிறான், என்று அவனை யெல்லோரும், உதை புதையென் றுடைத்து வாயிலும், மூக்கிலும், இரத்தம் வரும்படிக்கு அடித்து குப்பையி லிழுத்துப் போட்டுவிட அவன் மூர்ச்சையாகி, வாயிலும் மூக்கிலும், இரத்தம் வந்து கிடக்க, ஓர் நாயானது போய் அந்த இரத்தத்தை நக்கிக் கொண்டிருந்தது அதை யோர் வழிப்போக்கன் அதிர்ந்து ஐயோ பாவம் என்று அருகிற் சென்று, அவனது மூர்ச்சையைத் தெளியவைத்து, அடே நீ ஏனிப்படியிருக்கிறாய்? உன்னை யார் இந்த விதமாகச் செய்தது வென்று இரக்கத்தோடு கேட்க அதற்கவன் ஐயா! யான் வாங்கிறது பேசி உதைகிறது வாங்கிறத் தக்கிறது வந்து, நாயிறது வந்து நக்கிறது. அதை நீரென்ன கேட்கிறது வென்று பதில் சொன்னான் அதைக் கேட்ட வழிபோக்கன் அடே! நீ இவ்வள உதை வாங்கியும், உனக்கு இன்னுமந்த அம்பட்டக்கிறது போகுதில்லைப் பார்த்தையா வென்றும், எப்படியாவதன் விட நாயோளி யென்றும் பேசிவிட்டு அவனது வீடுபோய் சேர்ந்தானும் இதாவது, தானொடுங்கத் தன்குலமொடுங்க வென்பதற்கு அத்தாக்ஷியே யாம்

## கெஞ்சிக்கிப் புத்தி புகட்டல்.

ஞாயத்தைக் கொள்ளாதே நெஞ்சேயநி
யாயத்தைத் தள்ளாதே

ஓயாமல்சாத்திரம் பார்ப்பதினாலேதும்
உண்டோவினாத்திரமே—சும்மா
வாயாலேபேசியே போவதற்குவந்த
வண்ணாத்திமூத்திரமே (ஞா)

நயாதலேசபி யென்றவனுமுன்னாலே
நசனருள்பெறவில்லையா—அதை

ஆயாதபுண்ணியஞ் செய்தவருமின்ற
தாருமோ சொல்லிலையா (ஞா)

எல்லாஞ் சிவஞ்செய லென்றதைப்போலாமென்
றெண்ணிக்கொண்டேங்காமலே—கல்விக்
கல்லார்சிநேகம் நமையெந்தநாளுமே
கைவிட்டுநீங்காமலே (ஞா)

எல்லாருஞ்ஞானத் தெளிஞ்ஞரோகேளீர்சொல்
லென்றமுறைதவறி—யுலகில்
பொல்லாதவனெனப் பேரெடுக்கில்யாரும்
போற்றுவார்கள்பதறி (ஞா)

சாத்திரக்குப்பையைத் தள்ளுங்கடியென்னுஞ்
சாரத்தையிக்காலே—விட்டு
சூத்திரப்பொத்தலே மூடாலல்கொள்பவன்
சோம்பேறிக்கும்மேலே (ஞா)

ஆத்திரத்தோடு பணத்தைசம்பாதித்
தழிக்காமலேமூடி—வைத்துப்
பாத்திரப்பண்ட நகைநகையைவாங்கிப்
பாராமலேவாடி (ஞா)

தானதர்மத்தைச் செய்கின்றபணத்தைத்
தயாராவைத்திருந்து—ஊரில்
யானைமேலம்பாறி போட்டதிர்வேட்டோடா
டம்பரஞ்செய்வாய்துணிந்து (ஞா)

மாடமாளிகையென்னுங் கூடகோபுரங்கட்டி
மனைவியோடிருக்காமலும்—வீட்டில்
ஆடுமாடுகோடுதேடி வட்டிக்கிவிட்டு
அதில்காசைப்பெருக்காமலும் (ஞா)

பரதேசிகட்கன்னம் படைத்திடுவோர்வீட்டுப்
பானையில்சோர்குறையும்—அதைப்
பத்திரமாகவே மூடிவைத்தால்காணப்
பழையதாய்வயிர்நிறையும் (ஞா)

சத்தியநீதி தவறிநடக்கிடில்
தன்மையினையுறலாம்—சிக்கப்
பத்துப்பனிரெண்டு வயதிற்குள்ளேயிரு
பாலரையும்பெறலாம் (ஞா)

ஏராளமான பணமிருந்தால்நமக்
கெவர்களும்கைகட்டுவார்—அதைத்
தாராளமாகச் சிலவிட்டுக்கொடுத்திடில்
தாழ்ந்தோரெலாந்திட்டுவார் (ஞா)

அப்ளாக்குடும்பி யெடுத்துக்ராப்வைத்து
ஆடையலங்கரித்து—நல்ல
டப்ளாகோச்சு மோட்டாக்காருடன்மற்ற
சைக்கலேறப்படித்து (ஞா)

கொண்டமனைவியை விட்டயல்மாதரைக்
கூடிக்குலாவமலும்—கெட்ட
சண்டப்பிரசண்டனென்ற பெரும்பேராகித்
தாரணியிலுலவாமலும் (ஞா)

வட்டிக்குவட்டியாய்க் குட்டிபோடுமெதிர்
வட்டியைவாங்கவேணும்—அரையில்
கட்டினகந்தையின்றி வேறுவாங்காது
காலத்தைப்போக்கவேணும் (ஞா)

முக்காத்துட்டானாலும் முந்தானையில்மூனும்
முடிப்போட்டுவைக்கவேணும்—பாரில்
தொக்கானபேர்களைக் கண்டிடில்சண்டைக்கு
அடைதட்டிநிற்கவேணும் (ஞா)

ஊரையடித்து உலையிலேபோட்டு
உடலினைத்தேத்தவேணும்—சன்னத்
தாரைச்சுவற்றில் கண்ணாடிப்புதைத்தே
கட்டில்போட்டுலாத்தவேணும் (ஞா)

சாருயங்கள்ரூபத்தாய்ஜின் னெருயின்பிராந்தித்
தவிருபாலருடிக்கவேணும்—பின்பு
புருயமெல்லாம் வந்தோர்முன்வெளியாகப்
புறஞ்சேறதிரியவேணும் (ஞா)

இல்லாருடப்பா கெஜலட்டமரியோடு
தெம்பாங்குபாடவேணும்—நல்ல
ஜில்லாஜில்லாவாய்த்திரிந்து கெட்டவர்செய்யும்
செய்கைபிற்கூடவேணும் (ஞா)

பீடிசிக்ரெட்டுச்சுருட்டு கஞ்சாகோவிப்
பிடித்தின்னுந்தேரவேணும்—அந்த
வாடிக்கையையெந்த நாளும்மறவாது
வழக்கப்படுத்தவேணும் (ஞா)

ஆண்புத்திரிச்சிறைச்சாலை யவுதாரம்டெஜண்டி
யானதெநற்காக—வென்று
யோசித்தனுபவிக்காம லிருக்குமெவ்
விடலைகளுக்கன்பாக (ஞா)

---

எக்காலக்கன்னிக்கு இக்காலக்கன்னி

தேடியபணமுழுதுந் தேவடியாளுக்களித்து
கூடிக்குலாவிக் குணப்படுவதெக்காலம்

சயாதலோபியென வீணரொடுசேர்ந்துலகில்
ஓயாதுசண்டையிட் டுலாவுவதுமெக்காலம்

ஏழையின்வயிறெரித்து யேசப்பொருளைச்சேர்த்து
வாழையடிவாழையதாய் வைத்தண்பதெக்காலம்

இலவசகவேடபலைத்தைத்தே[illegible]ப்பெண்டிர்மேலெழுதி
இலசாக்மெஙக்கொடித்திருப்ப துவுமெக்காலம்

தன்னுடையபெண்டிரைத் தானாத்திவிட்டுவெளியில்
அன்னியப்பெண்கள்மீது ஆவல்கொள்வதெக்காலம்

சாஸ்திபாகப்படித்துச் சாலேஸ்திரம்வாராமல்
ஆஸ்திமுழுதுக்கா லடாதுசெய்வதெக்காலம்

எழுபிக்குமாடியி லிருந்துப்பெரும்பேறுனி
வாழைத்தண்டுக்கிலாக்கறி வைத்துண்பதெக்காலம்

கடன்கொடுத்தோர்தம்மைக் கண்டால்கதவடைத்து
நடமாடவிட்டவரை காம்பார்ப்பதெக்காலம்

கஞ்சாவபின்மதத்துக் கட்சாருயக்குடித்து
கெஞ்சாப்பொய்பேசி கிலேபெறுவதெக்காலம்

## எங்காட்கண்ணிக் கின்றுட்கண்ணி

எல்லாமெனக்கடன் இருந்துகையைக்கட்டியெதிர்
சொல்லாதுவண்ணக் துரையாவதெக்காலோ
காடுகரையானதெல்லாம் காசுகொடுத்தேவாங்கி
வீடுகட்டிவாடகைக்கி விட்டிடுவதெக்காலோ

இன்றுதலகாணியிட்டுத் தேகத்திற்கேசொகுசாய்
டன்றுண்டுகாறில் வுலாத்துவதுமெக்காலோ
கால்மீதுகால்போட்டுச் கட்டிவிற்குமேலிருக்கதன்
சால்வையிட்டுவென்றுயிர்க்கிளி ஷோதைதருவதுமெக்காலோ

பாசம்பிடித்தபணத் திற்கேசாம்பிராணி
வாசல்கொடுத்தேதமடி வைத்திடுவதெக்காலோ
தாசியின்சுகத்தாலே தன்னுடையபெண்டிரை
பேசித்துறத்திகல்ல பேர்பெறுவதெக்காலோ

தந்தைதாய்சொல்லைத் தடுத்தடித்துதன்வாய்க்கு
வந்தபடிபேசவனமை செய்வதெக்காலோ
வுதவாதுஇக்குடியென் றூரார்க்குப்புத்திசொல்லி
கிகவிதழுவுள்ளுக்குள்ளே வெட்டுவதுமெக்காலோ

விவேகசிந்தாமணிக்கி விவேகசிந்தாமணி

மட்டியாம் மனுசாளையும் நம்பலாம்
மழையிலாப் பயிர்தன்னையும் நம்பலாம்
கட்டிப்புண் ணறையாப்பையும் நம்பலாம்
காதகநெஞ்சக் காரரையும் நம்பலாம்
வெட்டிக்கொல் வீரர்தம்மையும் நம்பலாம்
விட்டுப்பெணயர் விதத்தையும் நம்பலாம்
குட்டிக்கும்பிடும் யானையை நம்பினால்
குடியழிந்து குறைவுற் றல்லவரே.

கள்ளுபோதைக் கணக்கையும் நம்பலாம்
கபமுண்டாகும் கண்பீடியை நம்பலாம்
தன்னுசாருயக் தன்னையும் நம்பலாம்
தக்கப்ருந்தி போண்டாமையும் நம்பலாம்
பன்னுப்பாடுன் கஞ்சாவையும் நம்பலாம்
பழக்கமான மன்பதிலையும் நம்பலாம்
துன்னுகோலியின் துயாத்தை நம்பினால்
சுடலேக்கேக சுருக்கினிற் சாவரே.

---

ரு-வம் அப்பா இதுகளெல்லாஞ் சரி, மிகுந்த சந்தோஷம் இதைத் தவிர்த்து வேறு ஏதாவது ஆருடந் தெரிந்தால் கொஞ்சம் சொல்வாய் பார்ப்போம்.

ஆ-வம் ஐயா! அப்படியே ஆகட்டும் ஆயினுங் கொஞ்சங் கவனமாய்க் கேட்கவேணும்.

ஆருடத்திற்கு கீருடம்

உந்தனைப் பெற்றமாது வுனக்கவள்தா யதுவாகும்
தந்தைதா னேயாவாமுன் தமயனும் அண்ணனாகும்
பிந்தையா யுனக்குப்பின்பு ஜெனித்தவன் றம்பியாகும்
தந்தைதாய் தம்மையீன்றத் தாயவள் பாட்டியாமே.

ஆ-வம் ஐயா! எப்படி யான் சொன்னவைகளெல்லாஞ் சரி தானா? அல்லது சரியில்லையா?

ஆ-வம் மித்திரா! இதுகளெல்லாம் உலகில் தெரியாதவை களா? தெரிந்ததுதானே, அப்படியிருக்க ஏன்? இதுகளைத் தெரிவிக்கின்றாய்?

ஆ-வம் ஐயா! தாங்கள் சொல்வதைப்போல் இதுகளெல்லாந் தெரிந்திருந்தால் தாயைப் பிள்ளை இச்சிக்கவும், பிள்ளையைத் தாயிச்சிக்கவும், அண்ணன் மனைவியைத் தம்பி இச்சிக்கவும், தம்பியின் மனைவியை அண்ணன் இச்சிக்கவும், மாமியை மருமகன் இச்சிக்கவும், மருமகனை மாமியிச்சிக்கவும், அக்கை தங்கைகளை அண்ணன் தம்பிகளிச்சிக்கவும், அண்ணன் தம்பிகளை அக்காள் தங்கை இச்சிக்கவும், தாய்தந்தைகளைக் குழந்தைகள் அடித்துத் துரத்தவும், அண்ணனைத் தம்பியடிக்க ஆள் வைப்பதும், தம்பியை அண்ணனடிக்க ஆள் வைப்பதும், இப்படி இன்னும் பலவிதச் செய்கைகளெல்லாம் செய்ய நேருமா? நேராது. ஆதலால் யான் சொல்வதைச் சரியென வொப்புக்கொள்ளுங்கள் சார்.

ஆ-வம் மித்திரா! இதுகளெல்லாஞ்சரி, ஒப்புக்கொண்டேன் இதுபோக இன்னும்வேறேதேனுமிருந்தால்சொல்வாய்பார்ப்போம்

ஆ-வம் நல்லது கேளுங்கள் தெரிவிக்கிறேன்

விகடாருடம்

கண்ணொன்றைக் கண்டதாகி ல்
காலது நடந்துபோகு ம்
காலது நடந்ததாகி ல்
கையதை யெடுக்கப்போகு ம்
கையதை யெடுத்ததாகி ல்
வாயதைத்தின்னப்போகு ம்
வாயதைத் தின்னதாகி ல்
வயாறதைச் சுமந்துபோகு ம்

வயரலைத் சுமந்ததாகி ல்
வலஜலமாகிப் போகு ம்
வலஜல மாருமாகி ல்
வருங்குளத்திற்குத்தா னே.

காலது நடக்குமாகில் கையதுவீசிப் போகும்
மேலது பெருக்குமாகில் மேனையு முதிப்போகும்
சேலது குறையுமாகில் செய்கையுங் குறைந்துபோகும்
கோலது வாடுமாகில் குரங்கதும் ஆடுந்தானே.

சோற்றினைக் கண்டால்வாயைத் திறந்திடு மாவலோடு
காற்றினைக் கண்டால்தேகங் கம்பளி தன்னைத்தேடும்
சேற்றினைக் கண்டால்காலுச் செருப்பினைக்கைதான் தூக்கும்
கூற்றினைக் கண்டா ருள்ளே கொதிப்பது வாகுந்தானே.

## வசனகாவியத்திற்கு கிசனகாவியம்

ஐயா! கேளுங்கள் உங்களுடைய லக்னாதிபதியாகிய சூரியனானவர் இப்போது எதாஸ்தானமாகிய இடம் விட்டு இடம் மாறி ஒன்னுக்குப்போயிருக்கிறார், அவ்விடத்திலே ரொம்பவும் கஷ்டம் உடனே சந்திரனானவர் அதைப்பார்த்துக் கஷ்டத்தை சகிக்கமுடியாமல் இரண்டேகுவாரார், அதைக்கண்டு ராகானவர் மூணிலே பிரவேசித்து கம்மினு இருந்து கொண்டார் அதினாலே வியாழனானவர் வெள்ளியைப் பார்த்துச் சனியைவரச் சொல்கிறார், உடனே சனியானவர் அதைக்கேட்டு கஞ்சாமடத்திலே இருக்கிற ஞாயரிடம் போய் வேண்டிக்கொள்கிறார், உடனே ஞாயரானவர் திடுக்கிட்டு மனம்பதறி திங்களையனுப்புகிறார், திங்களானவர் 8-மடத்திற்குள் வந்து கொட்டாவிவிட்டேங்கிக் கொண்டிருக்கிறார், அது கண்டு மனம் பொறுக்காது செவ்வாய் முன்னும், புதன் பின்னுமாக வந்து கொண்டே இருக்கிறார்கள் அவர்கள் வந்தால், இழுத்துக்கோ பறித்துக்கோ வென்றுசரியாய் 18-வருடம் வரையிலிருப்பார்கள் இப்போதுயெல்லாம் ஒன்றுக்கொன்று சண்டை ச்சரவுகளாகி, நான் பெரியவன் நீ பெரியவன் என்று வம்பிழுத்துக்

கொண்டிருக்கிறார்கள் ஆதலால் அவர்களெல்லாம் ஒன்று கூடிவரட்டும், அதன் பிறகு எல்லாம், சாவகாசமாகப் பார்த்துச் சொல்கிறேன்.

ரு-வ-ம் பேஷ் பேஷ் மெச்சினேன், சோதிடத்தில் நீ மிகுந்த புத்திசாலி மித்திரா இது இருக்கட்டும் வைத்திய விஷயங்கள் ஏதாவது தெரியவருமா?

ஆ-வ-ம் சார்! இது நேரம் வரை தங்களுக்குத் தெரியவாரதா? சரி தான் சரிதான் அதுதான் எனக்குச் சொந்தத் தொழிலே ஆதலால், தெரிவிக்கிறேன் கேளுங்கள் அந்த முறைகளைக் கொஞ்சம்

## இலிப்பாணியர்வயித்தியம்.

### சாரீரத்திற்குலேக்கியம்

காட்டுக்குள்ளாகலே நற்பெரியோர்முன்
பாட்டுக்கச்சேரியில் பாடுவோர்தொண்டை
அடைப்பாயிருந்தால் அதற்கொருபெரியக்
கடப்பாரைதனைக் காயவும்வைத்து
ஆவெனவாயையன் றுத்திறந்தே
கூவெனுஞ்சப்தம் கொஞ்சமுமின்றி
திடுக்கெனவெடுத்து லொடுக்கெனவிழுங்கில்
இடுக்கிலும்முடுக்கிலும் வெக்குமனுதிப்
பளிச்செனவோங்கிப் பாடிடமுன்போல்
வெளிச்சமதாகி வெளிவரும்பாரே

### வயற்றுவலிக்கிஷாயம்

ஐயா! ஆள் முழுங்கிப் பட்டை ஆட்டுக்கிடா மூட்டை, வண்ணெருட்டாங்காயி, உண்டு வளர்க்தாக்காயி, மம்பட்டிவேரு, கும்பிட்டிச்சாறு, எருமைக்குஞ்சி, இல்லாதவன் கெஞ்சி, சொறிஞ்சாணிலே, திறிஞ்சாந்தலே, கடப்பாரைக் கொழுந்து, கழுதைக் கொம்பு,

அமுக்கிறைக்குச்சி, ஆகாதவன்பிச்சி, ஆக இந்தக் கடைச் சரக்கும் பதினாலையும் கொண்டு வந்து, உரலைக் குறுக்கப் போட்டு, உலக்கையைப் படுக்கப் போட்டு, காலாலே மிதித்துக்கையாலேயிடித்து சாறெடுத்து மூன்று நாளைக்கி, ஜாமத்திலே ஜாமத்திலே சாப்பிட்டுக் கொண்டே வர, வந்த வயித்து வலிபோக, வராத வயித்துவலியெல்லாம் இட்ட வாலே வாராதென்று, அப்பர் தம்பி சப்பர் ஞானம் ஒன்றுமில்லாததிலே கூறி இருக்கிறார் இதற்குப் பத்தியம் மேற் சொன்ன தொன்றுமே இடையாது அவசியம் செய்து பார்க்க வேண்டியது.

## தாதுபுஷ்டிக்கி லேக்கியம்.

ஐயா! தாது புஷ்டிக்கி மருந்து வேறு மாறால் சன்னம்புப்பட்டை-வ-விசை, ஆத்தாம்பட்டை-இ-விசை, கன்றம்பட்டை-வ-விசை, கழுத்தாம்பட்டை-இ-விசை, பொடிப்பட்டை-வ-விசை, போக்குப்பட்டை-இ-விசை, நடைப்பட்டை-வ-விசை, தாவரம் பட்டை-இ-விசை, ஆக இந்த-8-பட்டையும் கொண்டு வந்து மையத் துவ்வி துண்டாய் நறுக்கிச் சாசெபித்து சல்லடையிலே பிழிந்து சட்டியாலே வடி கட்டி, ஒருச்சாமம் வரை வேகப் போட்டு, கல்லாக உருண்டு திரண்டு தண்ணி போலே வருஞ் சமயத்திலே உலக்கையாலே கிளறி ஒரு வருஷம் ஆறவைத்து சரியா ஒருமண்டலம் இருவத்தி பதிமூன்று நாளைக்கி தேங்காயளவு தேங்காயளவு வாயாலே யெடுத்து கையாலே விழுங்கிக் கொண்டே வந்தால் ஜாமத்திலே ஜாமத்திலே சரீரம் பெருத்து கனவிலே சண்டைக்குஞ் சவால் சேழ்க்கலாமென்று புளிப்பாணியர் தம்பி இளிப்பாணியர் சிறப்புப் பாயிரத்திலே கூறியிருக்கிறார் இதற்குப் பத்தியம் சாதம் குழம்பு ரசம் பலகாரம் தள்ளுபடி மிச்சமெல்லாஞ்சேத்துபடி இதைக் கவனமாய் சாப்பிடக் கைமீது பலன்.

## இடுப்பு வலிக்குத்தூள்.

ஐயா! கடைக்குப் போய், மல்லம்பட்டி-வ-பலம், மடத்துப் பட்டி-இ-பலம், புளியம்பட்டி-வ-பலம், பூலாம்பட்டி-இ-பலம் விருதுப்பட்டி-வ-பலம், வெள்ளிப்பட்டி-இ-பலம், ஊத்துப்

பட்டி-உ-பலம், ஓவரப்பட்டி-இ-பலம், செட்டிப்பட்டி-வ-பலம், சின்னூல்பட்டி-இ,பலம், சோலைப்பட்டி-வ-பலம், தொப்ளாம் பட்டி-இ-பலம், மூளிப்பட்டி-வ-பலம், முத்தாலப்பட்டி-இ,பலம், கரிகைபட்டி-வ-பலம், வாடிப்பட்டி - இ - பலம், ஆக இந்த பதினறு கடைச் சரக்கையும் கொண்டு வந்துக் குழியிலே வைத்து அம்மியாலே அரைத்து அப்படி யப்படியே தான்பண்ணி ஆகாயத்தைப் பார்த்த வீட்டிலே அடுப்பு வைக்காத இடத்திலே அடியில்லாத சட்டியிலே போட்டு, அனல் போடாது எரியப் போட்டு நல்லா பொன் போலே வருத்து கண்ணைக் கெட்டியாகத் திறந்துக் கொண்டு புறங்கையிலே வைத்து, வுள்ளங்கையாலே சாப்பிட்டுக் கொண்டே வந்தால், இருக்கிற இடிப்புவலித் தவிர இல்லாததெல்லாம் கிட்டவேவாரதென்று ஞானவெட்டியார்தம்பி வாணவெட்டியார் ஆயிரத்திரண்டாயிரத்திலே அன்பத்தி பதினேழாவதுபக்கத்திலே அஷ்ட மற்றபேட்டிலே கூறியிருக்கிறார் இதற்குப் பத்தியம் சாப்பாடு முதல் சகலமும் செத்தப்படி ஜலவாதி மலவாதி தன்னுபடி இதே பிரகாரம் 1-வாரஞ் செய்துக் கொண்டு வந்தால், இதன் மகிமையை வெளியே சொல்ல மாட்டேர்கள் கண் கண்ட பலன்

## தாலாட்டுக் லோட்டு

ராராரோராராரீராரோ—என்கண்ணே நீ
ஆராரோனவரெவரோ

ஊரார்கள்வாழுவதை—என்கண்ணே நீ
பொப்பாதுதான்வாழ்க
போராசைக்கொண்டிலகில்—என்கண்ணே நீ
பெருமூச்சாய்வந்தவனே

வேலைவிட்டுச்செய்யாமல்—என்கண்ணே நீ
வீடடக்கிவாழாதும்
ஆலைக்கரும்பதுபோல்—எனையா நீ
அலைச்சல்படவந்தவனே

கோழிக்கிண்டிறாப்போலே—என்கண்ணே நீ
கோணையெழுத்தைப்படித்து
வழியத்தொழில்புரிய—எனையா நீ
உடலெடுத்துவந்தவனே

உள்ளொன்றும்வெளியொன்றும்—என்கண்மணியே நீ
ஊரிலொன்றும்சேரிலொன்றும்
கள்ளமதாய்ப்பேசுதற்கு—எனையா நீ
கற்றுக்கொண்டுவந்தனனே

பெண்டாட்டிச்சொல்கேட்டு—என்கண்ணே நீ
பெற்றதாய்த்தந்தையரைத்
திண்டாடச்செய்துலகில்—எனையா நீ
சீரழிக்கவந்தவனே

பாரினைத்தன்கோள்மூட்டி—என்கண்ணே நீ
பார்க்கச்சண்டையைவிளைத்து
நாரதனைப்போலுலகம்—எனையா நீ
நாடிச்செய்யவந்தவனே

தந்தைக்கிரண்டாந்தாரம்—என்கண்ணே நீ
தாயாகவந்தவளை
சிந்தைதனன்றேதிச்சித்து—எனையா நீ
சேவிக்கவந்தவனே

தம்பியின்மனைவியரை—என்கண்ணே நீ
தாயென்றுமெண்ணாது
வம்புசெய்துகர்ப்பழிக்க—எனையா நீ
வாட்டமுடன்வந்தவனே

அண்ணன்மனைவியென்றும்—என்கண்ணே நீ
அறிந்துமறியாதவன்போல்

என்னைக்கொண்டுசேருதற்கு—எனையாநீ
இவ்வுலகில்வந்தவனே

அன்பதுவையதாயும்—என்கண்ணேநீ
ஆளாகப்பெண்டுகளை
இன்பக்கலியாணஞ்செய்து—எனையாநீ
இங்கிருக்கவந்தவனே

பத்துபன்னிரண்டு—என்கண்ணேநீ
பாலப்பிராயத்திற்குள்
தேர்ந்துநோய்வல்லாக்கி—எனையாநீ
சுகமடையவந்தவனே

மூதாக்கள்தேடிவைத்த—என்கண்ணேநீ
முக்கியமாஞ்சொத்துக்களை
நிதாகவேகோர்ட்டில்—எனையாநீ
சிலவழிக்கவந்தவனே

## திருப்புகழுக்குத் திருப்புகழ்.

ஓடி யோடி பாடு பட்டு
ஊக்கத்தோடு காசுசேர்த்து
போடி போடி சாமனிதன் மூடனாகும்

முக்தி பக்தி சித்தி யென்று
சித்தம் சித்தம் பித்த முற்று
சுத்தி கத்தி யெதிரிலோன் சோரனாகும்

தேடித் தேடி திரவியத்தை
சேகரித்து தாசி மாரைக்
கூடிச மனித னொருக் தோளனாகும்

இந்த சொந்த வேலை கட்டு
திண்முடியி ரக்க முற்று
வைத்துவும் மனித னொரு வஞ்சனாகும்

ஜாடி ஜாடி யாய் மதுவைச்
சந்தத மருந்திப் பண்ணு
பாடிடா மனிதனொரு பாவியாகும்

பத்தியான தற்கு முத்தி
படைகளான தற்குப் பித்தி
குந்திடா மனிதனொரு குறவனாகும்

கோடி கோடி யாகப் பொய்யைக்
கூடிக் கோப மதிகரித்து
மாடி கட்டி மகிழ வேணும் மனிதனானால்

மம்மதை நிறைந்துலகில்
செம்மையாகவே திரிந்து
அம்மலைச் செலுத்து வதும் அழகாமே

### கோசு கடிக்கா திருக்க

மொச்சுமொசு வெனவுங்கூடி மோகன ராகம்பாடி
கிசுவென்று மெண்ணிடாது தேகத்தைக் கடிக்கலான
கொசுவுக்குச் சாப்புத்தாளங் கொடுத்ததைத் தீயில்போட்டு
பொரித்திட வீட்டுவாசல் புகுந்தினி வந்திடாதே

### மூட்டை கடியா திருக்க

வீட்டையடைந்து தூங்கி விழித்திட சகித்திடாத
மூட்டையைப் பிடித்திரண்டு முழியையுந் தோண்டிவாயை
ஓட்டையதாக்கிப் பல்லையுடைத்து பின்துறத்திப் போட
சேட்டைகள் செய்திடாது தினமிதைச் செய்துபாரே

ஐயா! ஒரு ஊரில் ஒரு ஏழை பிராமணனிருந்தான்; அவனோ மிகுந்த பேராசையுடையவன், அவனுக்கோ பணத்தில் அதிகப் பிரியம், ஆதலால் அவன் அவ்வூரிலுள்ள ஓர்பிள்ளையார் கோவிலுக்குச்

சென்று சுவாமி விநாயகக்கடவுளே! எனக்கு ஊரார்கள் வாரு வதுபோருக்குமில்லை எனக்கோ பணத்தின் மேல் மிகுந்த பிரியம், அன்றியும் நான் ஏழை ஆதலால் தங்களுடைய கிருபாகடாக்ஷத்தினால் எனக்கு ஒரு ஐயாயிரம் ரூபாய் கிடைக்கு மாகில், நான் தங்களுக்கு ஒரு தேங்காய் உடைக்கிறேன், எனக்கு எப்படியாவது கிருபை செய்ய வேண்டுமென்று நேர்ந்து கொண்டு போகும்போது, பிள்ளையார் அவன் மனதைப் பரிசோதிக்கும் பொருட்டு, அவ்வழியில் ஐயாயிரம் பவுன் முடிந்த ஒரு பையானதைத் தென்படச் செய்தனர். அதையவன் பார்த்துவிட்டு, மிகுந்த பேராசையோடும், அதிக ஆத்திரத்தோடும் அருகிற்சென்று அங்குமிங்குந் திரும்பிப்பார்த்து ஒருவருமில்லாமையால், அதை எடுத்து அரையி லிருக்கிக்கட்டிக்கொண்டு அதிவேகமாக மனைக்குச்சென்று புதைய லப் பணங்கிடைத்த பூரிப்பினால், பிள்ளையார்க்குச் சொன்ன நேர்த் திக்கடனை மறந்தவனாய் இருந்துவிட்டான். இப்படியிருக்க ஒரு நாள் பிள்ளையார், அவனுடைய சொற்பனத்திற்றோன்றி, ஏ "பிரா மணா" நீ ஏன் எனக்குச் சொன்ன நேர்த்திக்கடனைச் செலுத்த வில்லை அதை நாளைக் கெப்படியாவது செலுத்தி விடுமென்று சொல்லி மறைந்தனர். அன்று விடிந்ததுமவனெழுந்து இராத்திரி நாமொரு கனவு கண்டோமே அது கனவா இருக்குமா, அல்லது அது நினைவாயிருக்குமா அப்படி அது கனவாகயிருந்தால், அது நேரே வருவதற்கு மார்க்கமில்லையே கல்பிள்ளையாராச்சுதே, அது எப்படி வந்து பேசும், அன்றியும் நாம் உடைக்குந் தேங்காயை எப்படியது உண்ணும்; இதன்றி அவ்விதமே நாம் உடைக்க வில்லை யென்றால் அது நம்மை என்ன செய்யும், தன்னால் செய்யமுடியாது எனக்கருதி பேசாது மறுநாளும் சும்மா இருந்துவிட்டான். அது கண்டு பிள்ளையார் மறுநாளும் சொற்பனத்திற்றோன்றி அடே எம காதகபிராமணா நீ யெனக்கு முன் சொல்லியபடி நாளை 10-மணிக் குள் ஒரு தேங்காயையுடைத்தாலாச்சுது இல்லாவிடில் நாளைப் பன் னிரெண்டு மணிக்குள் உனது பவுனெல்லாங் காணாமற் போய்விடும் கவனம் கவனம் என்றுசொல்லி மறைந்துவிட்டார். உடனேபிராம ணன் திடுக்கிட்டெழுந்து மனம்பதறிக் குப்பென முன்றபோலவெனக் கத்திவிட்டு இடுப்பிலிருந்த பையை தன் இரண்டு கையாலும்

கெட்டியாக இருக்கிப் பிடித்துக் கொண்டு என்ன யோசிக்கிறான் "ஆஹா" நாம் முன்னமே பல்லவா மோசம் போய் விட்டோம் வந்தது தானே வருமென்று முன் பின் யோசனையில்லாமலும் வாய்க்கொழுப்புச் சீலையில் வடிந்து வண்ணமாய் நாம் தேங்காய் உடைப்பதாய்ச் சொன்னதினாற்றானே அந்தப் பிள்ளையார் நம்மை ஒரு தேங்காய்க்கும் நம்பாமல் இப்போது அடிக்கடி வந்து தொந்தரவு செய்ய நேரிட்டது என்று தனக்குள் தானே விசனித்துக் கொண்டு எப்போது பொழுது விடியுமென்று விடிய விடிய உட்கார்ந்து கொண்டேயிருந்து விடிந்ததும் எழுந்து அவ்வூரிலுள்ள ஒரு கடையிற் போய் ஒரு தேங்காய் யென்ன விலையென்று கேட்க அதற்கு கடைக்காரன் ஐயா! பிராமணரே தேங்காயொன்று ஒரு அணாவாகும் என்றுரைக்க பிராமணன் "அடேயப்பா" இதென்ன இப்படியகோர விலையாகச் சொல்கிறீரென்றும் இத் தேங்காய்கள் உமக்கு எங்கிருந்து வருகுதென்றும் வினவ கடைக்காரன் ஐயா! இதுகள் எங்களுக்கு திருப்பட்டியிலிருந்து வருகுதென்று சொல்ல ஐயர் அது கேட்டு நாம் அவ்விடத்திற்குப் போனால் கொஞ்சம் விலை சல்லிசாக வாங்கிக்கொண்டு வரலாமென்று உத்தேசித்து அதை விட்டுநேரே திருப்பட்டியில் வந்து கேட்க அவர் முக்காலணா விலை சொல்ல பிராமணன் பேஷ் அங்கிங்கே காலணா சவுரியமானதால் இவனுக்கு எங்கிருந்து வருகின்றதென்று கேட்போமென்றெண்ணி ஐயா உமக்கு இதுகள் எங்கிருந்து வருகுதெனக் கேட்க, அதற்குக் கடைக்காரன் ஐயா இதுகள் எங்களுக்குத் ஆத்தக்குடியிலிருந்து வருகுதெனச் சொல்ல, பிராமணன் அவர்களுக்கு எங்கிருந்து வருகுதெனக் கேட்க கடைக்காரன் அவர்களுக்கு இதுகள் யாழ்ப்பாணத்திலிருந்து வருகுதெனச் சொல்ல, பிராமணன் அதிசயமே அதிக கஷ்டம் என்பதை அறியாதவனாய் சாமியை விடுத்து யாழ்ப்பாணத்திற்கே நேரே செல்வோமாகில், பிராமணன்மனைச் சொல்லி, பாசு காசிலே ஒரு காயை வாங்கிக்கொண்டு வந்து விடலாமே இவனும் தேன் காசைக்கொடுக்கிறது என்றெண்ணி அதை விடுத்து நேரே யாழ்ப்பாணஞ் சென்று அங்கு உள்ளவோர் தென்னந் தோப்பிற் புகுந்து அத்தோட்டக்காரனிடம் ஐயா! யானோர் பிராமணன் பாச காசுக்கு யெனக்கோர் தேங்காய் வேண்டுமென்னக் கேட்க, அதற்குத்

தோட்டக்காரன் ஐயா பிராமணரே தேங்காய் நானேறிப் பிடுங்கித் தந்தால் காலதாமதமாகும், தாங்களே ஏறிப்பறித்துக் கொள்வதென்றால் சும்மா ஒன்று பறித்துக் கொண்டுபோம் என்றான். அதைக் கேட்டு பிராமணன் காலணாவிற்காகவா பணமாத்துகிறது அதற்கு நாமே ஏறி ஒன்றைப் பறித்துக் கொள்ளலாமே என்றெண்ணி வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு மரத்திலேறி ஆவலோடு, தேங்காய்க் குலையைப் பிடிக்கத் தாவினான் அச்சமயம் வோர் பெரிய காற்றடித்து, அக்குலை தவறி விட அசல்மரத்தாய் மட்டையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான் அது சமயத்திலோர் ஒட்டகை வியாபாரி, அவ் வழியாக வரக்கண்டு, பிராமணன் ஓய் ஒட்டகை வியாபாரி யாரே! தாங்கள் என்னை இச்சமயத்தில் எப்படியாவதுங் காப்பாற்றிக்கீழே இறக்கி விட்டால், என்னிடத்தில் இருக்கும், ஐயாயிரம் பவுனையும் தங்களுக்கே கொடுத்து விடுகிறேன் என்று வேண்டிக் கொள்ள ஒட்டகைவியாபாரி சும்மா போகக் கூடிய நமக்கு வரக் கூடிய 5000-ம் பவுனையும், ஏன் விட்டு விட்டுப் போகவேணுமென்று பேராசைக்கொண்டு, அருகிற் சென்று ஒட்டகையை நிறுத்தியதன் மீது நின்று, மரத்தில் தொங்கும் பிராமணனுடைய இரண்டு கால்களையும், தனது கைகளால் இருக்கிப் பிடிக்க ஒட்டகையானது எதிரில் இருந்த ஓர் தென்னோலையைத் தாவிப் பிடிக்க மெள்ள நகர்ந்தது நகர்ந்த உடன் ஒட்டகை வியாபாரியானவன் பயந்து பிராமணனுடைய காலிரண்டையுங் கெட்டியாக, இருக்கிப் பிடித்தப்பிடியை விடாது தொங்கிக் கொண்டிருந்தான். அச்சமயம் ஓர் யானைப் பாகன், யானையின் மீதேறிக் கொண்டு அவ்வழியாகவர ஒட்டகை வியாபாரி கண்டு ஐயா! யானைப் பாகரே இச்சமயம் எங்கள் இருவரையுங் காப்பாற்றி விட்டால், பிராமணனுடைய 5000-ம் பவுனையும் என்னிடம் இருக்கும் 4000-ம் பவுனையும், உனக்கே தருகிறேன் என்றுரைக்க யானைப் பாகன், அது கேட்டு மிகுந்த சந்தோஷங் கொண்டவனாய் அருகிற் சென்று யானையை அடியிலிருத்தி அதன் மீதிருந்த வண்ணமாகவே, ஒட்டகை வியாபாரியினுடைய இரண்டு கால்களையும் பற்றிப் பிடிக்க யானையானது தனக்கு எதிரில் இருந்தக் குளத்தைப் பார்த்து தண்ணீர் குடிக்கப் புறப்பட்டது

புறப்பட்டமையால் யானைப் பாகனும் ஒட்டகைப் பாகனுடைய காலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு சொல்லு கின்றது.

---

தலைக்குமேலே குல்லாவைக்கிற சாயப்பு

மார்களே என்ற மெட்டு.

(யானை) விட்டு விடாதே பத்திர மிருக்கிப்
பிடித்துக் கொள் காலே காற்றில்
ஆடுது வோ லே நயனம்
இருக்கட்டும் மே லே நான்

வைத்திருக்கிற ஆயிரம் பவுனும்
உனக்கே யிக்கா லே வாரி
எனது லையா லே தருவேன்
மகிழப் பின்னு லே

என்று அதிகப் பரிதாபத்துடன் யானைப்பாகன் கூற ஒட்டகை வியாபாரி மேலேயுள்ள பிராமணனைப் பார்த்து சொல்கிறதாவது ஐயா!

தென்ன மரத்திலே மட்டையைப்பிடித்துத்
தியங்கு கின்ற வ ரே சற்ப
துமக்குள்ளப் பவ ரே மேலா
இருக்கப் பட்டவ ரே நாங்கள்

சேர்த்த ஐயாயிரத்தையும் வாங்க
லேகிக்கு எவ ரே பார்
சிரக்க மூற்றவ ரே செய்துப்
போடாதிர் தவ ரே

என்று பிருந்த மண்டபட்டத் அடன், ஒட்டகை வியாபாரி கரியவதைப் பிராமணன் கேட்டு யோசிக்கிறான் யானைப் பாக னுடைய பவுன் ஆயிரம் ஒட்டகை வியாபாரியுடைய பவுன்காலாயிரம் ஆக ஐயாயிரம் அதோடு நம்மிடம் இருக்கும் ஐயாயிரம் பவுனுஞ் சேர்ந்தால், அதிகமாய் இருக்கும் போலிருக்கிறதே என்று ஆலோ சித்து மட்டையின் ஞாபகத்தை மறந்தவனாகிக் கணக்குப்பார்க்கிறான்

இவ்வளவு ரூபா எவ்வளவு சுமார்
இருக்குமென்றெண் ணி — மனதில்
யோசப் பண் ணி — விரல்விடுத்
தே கணக் கெண் ணி — அவன்

இரண்டு கையையும் விரித்து வீழ்ந்து
இறந்தானே மண் ணி — லுயிரைத்
அறந்தானே கண் ணி — லெறும்பும்
இல்லாமற் றுண் ணி

அதாவது மேலிருக்கும் பிராமணன், மட்டையைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஞாபகத்தை மறந்தவனாகி பணத்தின் ஆத்திரத்தி னால் சித்திரையில் கனவு காண்பதற்கு சமமாய் ஒன்று, இரண்டு மூன்று, நான்கு, ஐந்து, என்று; பத்து வரை ஒவ்வொரு விரலாக விடுத்து கணக்குப் பார்க்க, பிடித்திருந்த பிடியானது நீங்கி தன திரண்டு கைகளும் பிரிந்து கீழே விழுந்து உயிரைத் துறந்துபணத் தை மறந்து எமலோகஞ் சேர்ந்து விட்டார்களாம் இதாவது, பேரா சைப் பெருந் தரித்திரமென்றும், அது கூடாதென்றும் மிகுந்த கெடுதி என்றதற்கு அத்தாக்ஷியாம்.

---

டிராமா ஆனந்தக்களிப்புக்கு
கீமா கீனந்தக் களிப்பு

ஆரணமாபுவிசேரே—டிராமா
ஆக்ட்டொணவெளி யேறிவந்தோரே

சாரணமென்றண்டுபோரோ—இதைக்
கவனத்துடன்கேட்டல்விதமடப்பிரே (ஆ)

ஆறைறுநறையாகப்படித்து—காலும்
ஆக்ட்டரென்றே வெளிவந்தாடித்து
தன்ராபுகழாப்பேரெடுத்து—டக்தன்
சம்பளத்தன்னை அதிகப்படுத்து (ஆ)

நாகத்தனைக்கைவிடாதே—தில்லர்
டப்பாதெம்மாக்கு டேமரியைவிடாதே
ஏக வசனத் தொடாதே—மதிப்
பேற்றும் இன்கம்டாக்ஸ் வரிவைத்தடாதே (ஆ)

தாளகதியின்றிப்பாடு—முன்னோர்
சரித்திரப்பாட்டுகளை விட்டுப்போடு
ஏளனக்கவிதைக்கொண்டாடு—கையில்
இருக்கும்பவுனைமெடல் செய்யாளைத்தேடு (ஆ)

சர்வண்டுரெண்டெனப்பேச—போத
சக்கின்கிளாஸ் வேணுமென்றன்னிவீச
கர்வத்துடனெதிர்த்தேச—பட்டிக்
காட்டான்களெய்த்து வாங்குமுன்காசு (ஆ)

புல்டாகைப்போலவியாங்குபோட்டு—போட்டோ
பிளாசக்கெடுத்தேயுன் படத்தினைக்காட்டு
தொல்புவியிலுன்பெயரைநாட்டு—தேர்ந்த
சகமான ஆக்டர்களை பூனைவிட்டோட்டு (ஆ)

ஆட்டம்வருமென்றன்னிர்பாரு—இல்லை
பாஸிலகைகளையோல்லொன்றாய்விற்றுநீரு
வாட்டமுற்றுவிக்தலூரு—ரொம்ப
வகைகெட்டுப்போகதென்றநித்தலூர்சேரு (ஆ)

ஊரார்க்குந்திப்பாகச்சொல்லு—ஏதும்
உன்னையேபுகழ்ந்து பதில்சொல்லு
மாரனைஞாயத்தில்நில்லு—பெரிய
மகத்தானைப் போலவே செய் தில்லு மல்லு (ஆ)

ஆ-வ-ம் இவ்வளவுஞ் சொல்லி விட்டு, இருக்கள் காண் போய் வருகிறேனென்றான் அதற்கு, ருத்திரதார், எங்குப் போகுறீர்கள் எனக் கேட்க அதற்கு ஆசியன்

ஊருக்குப் போகிறேன்

என்ன ஊர்?

அதாவது, திருவள்ளூர் திருவொற்றியூர் திருவாரூர் திருப் போரூர் திருக்கடையூர் திருவாம்பூர் திருவாலூர் திருக்கோவிலூர் திருநாகூர் திருப்பத்தூர் திருச்செந்தூர் இவைகளுக்கு மேலான திரு

மைலாப்பூர்

என்ன மயில்?

காட்டு மயில்

என்னக் காடு?

ஆர்க் காடு

என்ன ஆர்?

அதாவது, வையாறு, செய்யாறு, மெய்யாறு, பொய்யாறு வெட்டவாறு, குடவாறு, வாட்டாறு, மலட்டாறு, பிராட்டாறு, பிரட்டாறு, வருவாறு, இருப்பாறு, போவாறு, கல்லாறு.

பாலாறு

என்ன பால்?

கள்ளிப் பால்

என்ன கள்ளி?

இலைக் கள்ளி

என்ன இலை?

வாழை இலை

என்ன வாழை?

கர்ப்பூர வாழை

என்ன கர்ப்பூரம்?

ரசக் கர்ப்பூரம்

என்ன ரசம்?

அதாவது, பத்தி ரசம், புத்தி ரசம், முத்தி ரசம், பாக ரசம் போக ரசம். சோக ரசம், பருப்பு ரசம், வெறுப்பு ரசம், இருப்பு ரசம், வாச ரசம், நேச ரசம், ஊச ரசம்.

மிளகு ரசம்

என்ன மிளகு?

வால் மிளகு

என்ன வால்?

நாய் வால்

என்ன நாய்?

அதாவது, கோணாயி, ஒணாயி, கோம்பை நாயி, குட்டி நாயி வெட்டி நாயி, மட்டி நாயி, கரி நாயி, வெறி நாயி, சொறி நாயி கண்ணாயி, காலாயி, கையாயி, காக்காயி, மூக்காயி, நாக்காயி, இவை எலா மில்லாத

மர நாயி

என்ன மரம்?

பனை மரம்

என்ன பனை?

தாளிப் பனை

என்ன தாளி?

நாக தாளி

என்ன நாகம்?

கரு நாகம்

என்ன கரு?

முட்டைக் கரு

என்ன முட்டை?

அதாவது, கொக்குமுட்டை, வக்காமுட்டை, குருவிமுட்டை, குயில் முட்டை, மயில் முட்டை, கோழி முட்டை, கோஸ் முட்டை சோக முட்டை, எரு முட்டை, இதில் கழிந்த

கூ முட்டை

என்னக் கூ?

ஊருக்குப் போய் வருகிறேன் போகலாமா மித்திரா! பேஷ் பேஷ் மெச்சினேன், மிகுந்த சச்சிதம் ஆதலால் என்னுடைய சந்தோஷத்திற் காக, இதோ நமது வீட்டிற் சாப்பிட்டு விட்டுப் போவாயென்று விருந்து செய்ய, ஆசியன் அதை அருந்தி விட்டு, அந்த விருந்தின் மகிமையைக் கூறல்.

---

இராகம் நிராகம் தாளம் எக்கதாளம்.

என்ன சொல்லுவாய் மனமே என்ற மெட்டு.

ஆஹா நானென்ன சொல்லுவேன் இன்று
அருந்திய விருந்திலே
இருந்த உணவுகளை
ஓகோ நானென்ன சொல்லுவேன் (ஆ)

ஏக போகம தாகவிக்குனே
பாகத்துட னிஞ்ம கேகவிதக்கதிவை (ஆ)

அதிசயமெனு மலராழகியவீட்டு
அரையினைச்சுத்தப்படுத்தியே விலைபோட்டு
எதிரிலாவிருந்தென்ன வேனுமெனக்கேட்டு
எடுத்துவெடுத்துப்படைத்ததை வெகுநீட்டு (ஆ)

அப்பளமுறுக்கு வடைபாயாசம்
அதிரசங்கற்கண் டுடன்பழவாசம்

தப்பளம்புளியோ தரைத்துவனம்
சர்க்கரைசாதத் தொடுபொங்கல்வனம்

சட்னிபொடிகெட்டித் தயிர்சாம்பாறு
தயிர்பால்மோர்பச செய்வெகுஜோரு

கத்தரிக்காய்பருப் பொடிகூட்டுக்கறி
கருணைக்கிழங்குவறு வல்லிசவுஞ்சறி

உருளைக்கிழங்குபோண் டாபொடிமாச
உன்னவுண்ணசுசி க்காமதுபோதை

அவிட்டல்துவட்ட லைத்தசனைபச்சடி
அருமை பருமை பலவாறுகிச்சடி

பலபலவிதக்காய சுக்கனிதேறுடு
பலமாசகனிகூடைத்தி ன்போடு
நிலவுழித்தேவின் றனக்குச்சாப்பாடு
செய்தனர்களநுவோர் பெருஞ்போடு (ஆ)

ஸ-ம் ஐயா! டிராமா ஜெனங்களை வேண்டு மென்றுக் கெஞ்சிச்சொல்லி வருமாறு நடத்திக்கொண்டால், கூடிய சீக்கிரம்ஜெனுண் டாகிவிடலாம். அதாவது

தாயிதந்தைமாரியர தவித்தபேர்க்கு
    தன்னுடையகாசெல்லாயிடைக்காட்டி
காயிதத்தில்ஸ்டாம்பு வொட்டியதற்குமேலே
    கையெழுத்தைப்போட் டிரண்டுசாக்ஷியையைவத்து
ஆயிரமல்லதிரண் டாயிரத்தைவாங்கி
    அசியாயவராக்டர்களைச் சேர்த்துக்கொண்டு
பேயினைப்போலேயலைந்து பெருண்டென்றப்
    பெயரடையுமிந்த மதனைப்பேசிடுவேனே.

---

ராமாவுக்கு கேமா கும்மிக்கி கெட்டி.

கோணக்கிராப்பு வைக்கவேணும்-பட்டுக்
கோட்டுக்ஷூசும் போடவேணும்
நாணப்படா தலையவேணும்-இந்த
நாட்டிலுள்ளோர் மதிக்கவேணும்

பெண்களைபேகூட்டிப் போகவேணும்—இரட்டை
பிசவர்ட்டுந் தாவேணும்
உண்மையைப்போல் நடிக்கவேணும்—ஆக்டர்
ஊணுக்குக்கஷ்டப்படவேணும்

ஏமாந்தஆக்டரைப் பேசவேணும்—அந்த
ஏசப்புளுகைப் புளுகவேணும்
காமாந்தகாரன் கொள்ளவேணும்—வுள்ளக்
காசெல்லாந்தீர்ந்து விடவேணும்

ஏஜண்டேஸ்தானம் பெறவேணும்—ஆக்ட
ரென்பேரைமோசஞ் செய்யவேணும்
வாஜயடா லடிக்கவேணும்—கடன்
வாங்கிப்பேத்மாத்துப் பண்ணவேணும்

ஆக்டர்களையிடு காட்டவேணும்—காசக்
கர்தவூபார்களைக் கெஞ்சவேணும்
பாக்ட்டில்காசில்லா திருக்கவேணும்—பட்டப்
பகல்வெளிச்சம் போடவேணும்

சாப்பாடுமில்லாது செய்யவேணும்—ட்ரையின்
சார்ஜுசெக்தார தனுப்பவேணும்
கூப்பாடுபோட விட்டிடவேணும்—கெட்டக்
கோபக்காரன்போல் பேசவேணும்

பேர்பெற்றவாக்கட்டரைத் தேடவேணும்—சடையிப்
பெஞலாட்டம்ரெண் டொன்றுவைக்கவேணும்
ஊர்க்கடன் தன்னை யொழிக்கவேணும்—பின்பல்
லைரவிட்டுடோடாத் தூக்கவேணும்

இப்படிப்பேசலேஜன் டாகவேணும்—உன்னை
எந்தாக்டருமெதிர்ப் பார்க்கவேணும்
தப்பிதஞ்செய்யா தவன்போலே—பின்னுந்
தாராளமாக வரவேணும்

## கெவுளிசாஸ்திரம்

வடபுரத்தில் கெவுளியது சொல்லிற்றென்றால்
    வடுகரெலாந் தெலுங்கரென வருவார்கண்டாய்
படபடென கெவுளியது கிழக்கேசொன்னால்
    பல்போனக் கிழவியரும் பாட்டியதாவாள்
தடபுடலாய்க் கெவுளியது தெற்கேசொன்னால்
    தாசியவள் தேவடியா ளாகிப்போவாள்

பட்டமிட்டன செவ்வியது மேதிக்கொள்ளுன்
மனுஷரெலாம் மாண்டிடாய்ப் போவார்களே.

## காச்சலுக்கு மருந்து

இருமையாக் குளிருங்காய்ச்சல் சீறிட மிக்கிளைர்கள்
ஒருமையாய் மதுரைநாகை போகிகோல் தன்னிற்சென்று
அருமையாய் மூன்றுமாரோக் கதில்குளித் தேப்பமைக்கை
எருமையே மோருத்திச்சாப்பிட் டிருந்திடப் பாக்குபோமே

## கண்வலிக்கு மருந்து

கண்ணிலே வலிவந்தோர்க்கு கைகண்ட மருந்தொன்றுண்டு
மண்ணிலோர் பிடியைக்கொண்டு வந்தவர் கண்ணில் போட்டு
புண்ணியோர்க் குச்சியைவிடுத்துப் பொத்த லாகப்பார்க்க
விண்ணிலேயவர் கண்ணொன்றுப் வெளிச்சம தாகுமாமே.

## பட்டிணம்பொடிக்கி

பட்டிணம்பொடி யைப்போட்டுப் பழக்கம தானதாலே
கெட்டிக்கைப்பொடி யையெனக்குச் சீக்கிரம் தந்தாலுந்த
வட்டியும் முதலுஞ்சேர்த்து வாங்குவது மித்தேதி
அட்டியில் லாமதருவே னுண்மைக்கேள் செய்குவீரே.

## விருத்தம்.

காட்டித்தலைக ளொன்றோ டொன்றுமோதிட லாமத்தாலும்
கோட்டித்தலை விலைகூடிய தென்றுரிக் கூறிக்கொள்ள
மாட்டித்தலை யதைக்கேட்டு நொக்கொடி மகிழ்ச்சையுப்பு
ஊட்டித்தலை பிடங்கூறிய காதையோ கதியமே.

ஐயா! கேளுங்கள், இங்ஙனம் வசிக்கும் நம்மவராகிய நாட்டுத் தலைகள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டோ அல்லது கொடுக்கல் வாங்கல் முதலிய லேவா தேவியினாலோ அல்லது குடி களவு சூது பொய் இவைகளால் பணப்பேய்பிடித்து ஒருவரை யொருவர் மோசிக்கவோ அல்லது வேறு எந்தக் காரணத்தைக் கொண்டோ முன் பின் பாராது பணக் கஷ்டம் தோன்றுமளவும் அதிகபணங்களை செலவழிக்க உறுதியைக் கூறுவதுமாகிய கோர்ட்டுத் தலைகளென்னும் 'வக்கீல்தலைகளுக்கு இருக்க இருக்க விலையாகிய பீஸ்இரட்டித்துக் கொண்டே வருகிறதென்றும் அதனால்நாம்கெட்டுப்போவோமென்றும் அவைகளை நாமே தேடிக் கொண்டவை யென்றும் நமது சுதேசித் தலைகள் ஊரில் கூட்டங் கூட்டமாகக் கூடி பேசிக்கொண்டிருக்க அதைக் கண்டு மாட்டுத் தலையானது கேட்டு மனம் வாடி திகிலடைந்து ஓட்டம் பெருநடையாக ஐழக்சாப்புக் கடையிலிருக்கும் ஆட்டுத் தலையைப் பார்த்து ஐயா ஆட்டுத்தலையாரே நம்மூரில் கோட்டுத் தலைகளென்னும் வக்கீல் தலைகளுக்கு விலையாகிய பீஸ் இரட்டித்துக் கொண்டே வருகிறதென்றும் அதனால் நாம்கெட்டுப் போவோமென்றும் அவைகளை நாமே தேடிக் கொண்டதென்றும் நமது சுதேசித் தலைகள் ஒன்று கூடி பேசிக் கொண்டிருக்கிறதே நாளைக்கு நம்முடைய தலைகள் எப்படி யாகிறதோ என்ன விலைக்கு போகிறதோ ஒன்றுந் தெரிய வில்லையே என்று மிகுந்த வருத்தமுற்றுச் சொல்ல அதை கேட்டு ஆட்டுத் தலையானது

## விருத்தம்.

வாழுந்தலையைக்கண் பொருக்காதலிங்கே மவாதுசெய்யும்
வாழுதலைநாவிர்க்கு ருசியாயுண்ண விப்பாரித னில்
வீழுதலைபாகவே நம்மைவருத் திட்டவேதனையே
ஏழுதலை முறையாயினும் விட்டிடாது கணிப் பாவமே

## வசனம்.

ஐயா மாட்டுத் தலையாரே இதற்கு நாமென்ன செய்வோம் நம்மைப் படைத்தவன் அப்படிப் படைத்திருக்கிறான் அவனே நம்முடைய பாவமானது

ஈரொரு தலைமுறையாயினும் விடாது என்பதற்குச் சந்தேகமில்லை ஆயினும் இப்போது நாமென்ன செய்கின்றது ஒன்றுஞ் செப்ப முடியாது ஆகலால் காத்தல் அழித்தல் படைத்தல் என்னும் முத்தொழிற்கும் வல்லகடவுளாயுள்ள ஒருவன் எவனோ அவனைத் துதி செய்தாவது நமக்கேற்பட்ட பாவத்தை நிவர்த்தி செய்துக் கொள்வோமென்று ஆட்டுத்தலையும் மாட்டுத்தலையும் ஆறுதலையாகிய முருகனை வேண்டிய துதி

விருத்தம்.

வேறுதலையைத் தந்துனாக்கி ரட்சித்து விட்டிடாதிப்
பெருதலையைத் தந்துவிம்பிக்கப் பார்த்தும் பிரியலாமோ
தெருதலையா யினுஞ்சொல் லொணுதோ செந்திணைப்புனத்தில்
ஆறுதலையைக் கொண்டவன்னையே யெங்களை யாளுவாயே

வசனம்.

என்று துதித்து வேண்டிக் கொள்ள ஆறு தலையைப் பெற்ற சாக்ஷாத் முருக பிரான் நேரிலேயே பிரத்தமாகி ஏ ஜீவர்களே உங்கள் துதியை நான் ஏற்றுக் கொண்டேன் நீங்கள் வருத்தமடைய வேண்டாம் உங்களுக்காக வேண்டியே யானிப்போது சென்று என்னுலியன்ற வரை பிரயாசைப்பட்டு சைவசமயமென்று ஒன்றை உண்டாக்குகிறேன் அதிலிருந்து உங்களுடைய குறைகளெல்லாம் ஏதோ கொஞ்சத்திற்குக் கொஞ்சம் நிவர்த்தி யாகுமென்று கூறி மறைந்த தாக மாட்டுத் தலையும் ஆட்டுத் தலையும் என்னிடம் சொல்லிற்று. ஆகையாலிது ஆட்டுத் தலையால் வந்த அசைவ புராண மென்று நான் பேர் வைத்திருக்கிறேன்.

ஐயா! ஓர் அரசனுடைய நகரத்தில், சத்திரங்கள் சாவடிகள் மடம் தடம் கூபம் சாலை என்ற சகல தானங்களும் நிறைந்து, அத்தோடு சோம்பேறி மடமென்று ஒன்றுங் கட்டப்பட்டிருந்தது அதில் அரசனுடைய கட்டளைப்பிரகாரம் மூன்று வேளையுந் தவறாதபடி அன்னதானம் நடந்தேறி வந்துகொண்டிருக்க, அவ்வூர் சமுசாரிகளெல்லாம், வேலைக்குப் போகிற சோத் தவித்து, மற்ற சோ

மெல்லாஞ் சோம்பேறி மடத்திற்கு வந்து நாலுஞ் சோம்பேறி என்று இலவசத்தில் சாப்பிட்டு விட்டு, வேலை செய்கிற சாதகர்களை எல்லாம் மிச்சப்படுத்தி லாவாயினர். அதைக் கண்டு அவ்வூரிலுள்ள ஒவ்வொருவரும் சோம்பேறி சோம்பேறி என்று அதிகமாகவே வந்து கொண்டிருக்க மடாதிபதி யானவர் பார்த்து, இதென்ன சங்கடமாக விருக்கின்றது, அரசனிட்ட கட்டளைக்குமேல் ஆள் வருகிறதே என்று நினைத்து, அரசனிடத்தில போய் மேற்படி சங்கதிகளை எல்லாம் தெரிவிக்க, அரசனதைக் கண்டு, மந்திரி இதென்ன ஆச்சரியமாக விருக்கின்றது, ஊரிலுள்ள யாவேர்களும் சோம்பேறியாயிருந்தால் இதில் உண்மையான சோம்பேறிகள் இன்னவர்கள் தான் என்று தெரிய வேணுமே, அதற்கென்ன செய்கின்றது என்று கேட்க மந்திரி பார்த்து அரசே! அதை யான் நாளையத்தினம் தங்களுக்குக் காண்பித்து வைக்குறேனென்று, மறுநாள் வேட்டைக்குப் போய் வரும் மத்தியான நேரத்தில் மந்திரியானவர் காவலாளியை அழைத்து சத்திரத்தில் எல்லோரும் வந்து சாப்பிட்டு விட்டு உறங்கும் வேளையில் நாலுபுறத்திலும் தீயைவைக்கும்படி உத்தரவு செய்ய அதைக் கேட்ட காவலாளியானவன், மறுநாள் சோம்பேறி மடத்தில் எல்லோரும் வந்து மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டு விட்டு கும்பகர்ணனைப் போல தூங்கும் வேளையில் சுற்றிலுந் தீயை வைத்து விட்டு ஓடிவந்து மந்திரியிடஞ் சொல்ல உடனே மந்திரியானவர் அரசனை சோம்பேறி மடத்திற் கழைத்துக்கொண்டுபோய் மடத்தின் வாசலில் நிற்கவைத்து பாருங்கள் காண்பிக்குகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்குஞ் சமயத்தில் தீயானது குபீலெனப் பிடிக்க, அதற்குள் படுத்திருந்த போலி சோம்பேறிகளெல்லாம் தீ தீ தீ என்று வாரிச் சுருட்டி எழுந்து குய்யோ முறையோ வென்றுக் கூச்சலிட்டு வெளியில் ஓடத் தலைப்பட்டார்கள். அது சமயம், மந்திரியானவர், அரசே! இதோ பார்த்தீர்களா! தப்பித்தோம் பிழைத்தோம், இனிமேலிந்த மடத்திற்கு வரக்கூடாதென்று ஓட்டம் பிடிக்கின்றார்களே, இவர்கள் எல்லோருந்தான் போலி சோம்பேறிகள் இனி, உண்மையான சோம்பேறிகள் உள்ளே இருப்பார்கள். அவர்களையும் காண்பிக்கிறேன் உள்ளே வாருங்கள் என்று சொல்லி அரசனை உள்ளே அழைத்துக்.

கொண்டுபோக, அங்கொருவன் சாப்பிட்ட கையைக் கழுவாமல் படுத்துக்கொண்டிருக்க மந்திரியானவர் அரசே! இதோ பாருங்கள் இவன் சாப்பிட்ட கையைக் கழுவக்கூட சோம்பேறித்தனம் பட்டு அப்படியே படுத்திருக்கிறான் இவனொரு சோம்பேறி. இதற்கடுத்தவனைப் பாருங்கள், வாழைப் பழத்தை உரித்து தின்பது கஷ்டமென்று தோலோடு வாயில் வைத்துக் கொண்டிருக்கிறான், இவனொரு சோம்பேறி என்று காட்டிக் கொண்டும், ஒவ்வொன்றாய் சுத்த பிட்டுச் சொல்லிக் கொண்டும் வர, அங்கொருவன், அவர்கள் பேசிய சப்தம் பொறுக்க முடியாது, சீச்சீ இதென்னடா சந்தை இரைச்சலாக இருக்கிறது என்று திரும்பிப் படுத்தானும், அதையும் அரசனுக்குச் சொல்லி, இன்னுங் காண்பிக்குறேன் உள்ளே வாருங்களென்றழைத்துக் கொண்டு போக, அங்கொருவன் படுத்திருந்தானும், அவனைக் காவலாளியை விட்டு எழுப்பும்படிக்குச் சொல்ல காவலாளி அவனைத்தட்டி அடே! பிடிக்கின்றது எழுந்திருவென்று சொல்ல, அதற்கவன், கண்ணைக் கூட விழிக்காமல் பிடித்தாற்பிடிக்கட்டும் போ போவென்று சொல்லி விட்டு மறுபடியும் படுத்துக் கொண்டானும், உடனே மந்திரியானவர் அரசே! பார்த்தீர்களா இவர்கள் தான் உண்மையான சோம்பேறிகள், மற்றவர்களெல்லாம் போலி சோம்பேறிகள் என்று சொல்ல, உடனே அரசன் பார்த்து மிகுந்த ஆச்சிரியப்பட்டு, அது முதல் அவ்வூரில், அவர்கள் சாலவரைத் தவிர, மற்றவர்களை எல்லாஞ் சேர்க்காது அடித்துத் துரத்தும்படிக் காட்டச் செய்து விட்டு போனார்களாம் இதாவது யார் யார் எத்தொழிலைக் கைக்கொள்ளினும், அவரவர் அத்தொழிலிற் தேர்ச்சியடைந்திருக்க வேண்டுமென்பதற்கு அத்தாட்சியோயாம் அறியுக.

சந்தச்சரபம் ஷண்முகதாஸ் அவர்கள்
இயற்றிய

## விநோதவிகடப் பிரசங்கம் முதற்பாகம்

முற்றிற்று.

1842



ிகடப்பிரசங்கன்.

2081